215043

# செந்தமிழ்

தொகுதி XXXI

Aug-Sep 1934

JL
O31m 24, N034
N34
215043

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௧] பவ வருடம் ஆவணி மீ [பகுதி-௰.
Vol. XXXI. August-September 1934. No. 10.

உள்ளுறை.

| | | |
|---|---|---|
| பழமலழக குணைத்திறம்:— | திரு. நாராயணையங்கார் (பத்திராசிரியர்) | ௨௧௭—௨௨௪ |
| கம்பராமயண இன்கவித்திரட்டு:- | ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், B.A. | ௨௨௫—௨௩௪ |
| புத்தகங்களின் பயன்:— | „ வை. சா. வேங்கடராமையர். | ௨௩௫-௨௩௭ |
| புத்தகங்களின் மதிப்புரை: | உதவிப்பத்திராசிரியர் | ௨௩௮—௨௪௦ |
| கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) | ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர். | 25—32 |
| பெருந்தொகை (விசேடக்குறிப்பு):- | „ மு. இராகவையங்கார். | ௯௪௧—௯௪௮ |
| குருகைமான்மியம்:— | T. K. இராமானுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர். | 257—264 |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு :— | | |

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1934.

imathu R. SHANMUGA RAJESWARA
ı SETHUPATHY AVERGAL, and
THIRU. NARAYANA IYENGAR at the
/er Press, No. 54, New Jail Road, Madura.

உ

## ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகங்கள் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும் இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௧] பவ வருடம் ஆவணி மீ [பகுதி-௰.
Vol. XXXI. August–September 1934. No. 10.

## பரிமேலழகருரைத்திறம்.

உரையாசிரியர் பலருள்ளும் சிறந்த பரிமேலழகரெழுதிய திருக்குறளுரையானது கற்றோர் பலராலும் பாராட்டப்பட்ட பெருமையுடைத்துள்ளது. அங்ஙனம் பாராட்டுதற்கேற்ற அவ்வுரையின்பெருமை கற்பவர்பலர்க்கும் புலப்படுமாறு ஒரு சிறிது இங்கு வரையப்பெறுகிறது.

அவ்வுரையுள், பிற்காலத்தவரெழுதும் உரைகளில் தமக்குத் தெரிந்தவிஷயங்களையே இடம்நோக்கி வெளியிடுவதுபோலன்றிக் குறள்தோறும் பொழிப்புரையெழுதி, விளங்காதவற்றை விளக்கவேண்டியும், வழுப்பாடுதோன்றாநிற்குமிடங்களில் அவ்வவ்வழுக்களைக் களையவேண்டியும், பொருட்பொருத்தம் தோன்றாத இடங்களில் பொருட்பொருத்தந்தோன்றுமாறு சொன்முடிபுகாட்டியும், மற்றும் ஆங்காங்குப் புலப்படுத்தற்குரியவற்றை விரிந்த கருத்துக்களடங்கிய சுருங்கிய சொற்களால் விளக்கியும் விசேடவுரைவரைவது அவர்க்கியல்பு.

அம்முறைகொண்டு முதற்குறளின் உரையை நோக்குவாம்.

'அகரமுதல எழுத்தெல்லாம்' என்றதை, 'இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை' என்றார். இதனைப் பொதுநோக்கால் நோக்குங்கால் இத் திருக்குறளில் எடுத்துக்காட்டுவமையணி உள்ளது என்பதை உணர்த்தினர் எனத் தோன்றும். இந்நூலில் மற்றுமுள்ள குறள்களில் ஆங்காங்கு விலக்கணிமுதலிய வேறுபல அணிகளும்

உள்ளனவாக, அவற்றையும் இஃதிஃது இன்னின்னது என வரையாது அவர், இக்குறளின்கணுள்ள அணியை மட்டும் யாம் தெரிந்து கொள்ள வரைந்தார் என்பது பொருந்தாது; பின்னை என்னகருதி வரைந்தாரென இங்கு ஆராய்வாம்.

கடவுள்வாழ்த்து என்று நுவல்பொருள் எடுத்துக் கொள்ளப்பட்டமையால் இங்குக் கூறப்படும்பொருள் கடவுள்வாழ்த்தாகவே இருக்கவேண்டும் என்பது நியமம். அந்நியமமொழியப் பிறிதொருபொருளைக் கூறுவது வழுவாம். அந்நியமம் தவிருமாறு எடுத்துக்கொண்ட பொருளையொழித்து 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று பிறிதுபொருளாகிய எழுத்துக்களின் இயல்பு கூறியது சொல்லிலக்கணநோக்கால் மற்றொன்று விரித்தல் என்னும் குற்றத்தின்பாற்பட்டு வழுவாயிற்று. இவ்வழுவைச் சொல்லிலக்கணங்கொண்டு பரிகரித்தற்குச் சிறிதும் இடமின்மையால் அணியிலக்கணங்கொண்டே பரிகரிக்கவேண்டி, 'இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை' என்றார்.

இக்கூற்றால் அவ்வழுக் களையுமாறெங்ஙனமெனில், செய்யுளியற்றுவோர் சொல்லிலக்கணமொன்றேபற்றிச் செய்யுளியற்றின் அது சிறவாமைநோக்கி, அச் சொல்லிலக்கணத்துக்குப் புறம்பாயுள்ள பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்னும் இவற்றையும் செய்யுளுக்கு அங்கமாகக்கொண்டு செய்யுளியற்றல் எல்லோர்க்கும் ஒப்பமுடிந்தது. அம்முடிபுகொண்டே, இங்கு, தெய்வப்புலமைத்திருவள்ளுவனாரும், எடுத்துக்காட்டுவமையணிதழுவி இச்செய்யுளியற்றலானார். அவ்வெடுத்துக்காட்டுவமையணிக்கு உறுப்பாய்முன்னிற்கும் உவமப்பொருள் நுவல்பொருளின்வேறாய் அந்நுவல்பொருளோடொப்புமையுடைய ஒரு வாக்கியப்பொருளாயிருக்கவேண்டுமென்பது இலக்கணமாதலால் அவ் வணிதழுவப்படும் செய்யுட்கள் அவ்வணிக்கு இன்றியமையாத பிறிதுபொருளை நுவலுதல் வழுவாகாதென்று வழுக்களைய வேண்டி அணியிலக்கணம்பற்றி வழுக்களைந்தார் என்பது தோன்றுமாறு காண்க.



'தலைமைபற்றிவந்த' என்றது அவ்வெடுத்துக்காட்டுவமையின் பொதுத்தன்மையுணர்த்தியவாறு. அது, 'முதல' என்னும் சொல்லினுள்ள முதனிலையான முதல் என்பதனாற் பெறப்பட்டது. அம்முதல் என்னும் சொல்லுக்குக் காலமுதலும் காரணமும், சினைப்பொருளின் இனைபிறிதான முதற்பொருளும், தலைமையும் ஆகிய பலபொருள்களுடைமையால் ஒவ்வொருவர் ஒவ்வொருபொருள்கொண்டு மயங்காமைப்பொருட்டுப் பொருட்பொருத்தநோக்கிப் பொதுத்தன்மை இன்னதெனத் தெளியுமாறு அவ்வெடுத்துக்காட்டுவமையைத் 'தலைமைபற்றி வந்த' என்ற அடைமொழியால் விசேடித்துக்கூறினார்.

எழுத்துக்களுள் அகரத்திற்கும், உயிர்த்தொகுதி (-சேதனம்)களுள் ஆதிபகவனுக்கும் உள்ள தலைமைகள் இவ்வாற்றான் உள்ளன என விளங்காமையால் அவ்விருவகைப்பொருள்களினியல்புநோக்கி, 'அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற்பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானும் கொள்க' என விளங்கக் கூறினார்.

'அகரமுதல எழுத்து' எனவே அமைவதாகவும், 'எழுத்து எல்லாம்' என்றது வேண்டாது கூறுதலாய் வழுவாமென்பது நோக்கி, அவ் வழுக்களைதற்பொருட்டுத் 'தமிழெழுத்துக்கேயன்றி வடவெழுத்துக்கும் முதலாதல்நோக்கி, எழுத்தெல்லாம் என்றார்' என்றார். இதன் கருத்து, எழுத்து என்ற சாதிப்பெயரால் எல்லாவெழுத்தும் கொள்ளப்படுவதாயிருக்கச்செய்தேயும், 'எல்லாம்' என்றது ஒருவகைச்சாதிப்பெயர் பலவேறுசாதியை யுணர்த்தமாட்டாது; வெவ்வேறுசாதியான பிறவெழுத்துக்களையும் உணர்த்த எல்லாம் என்பது வேண்டும் என்பதே.

பிறமொழியெழுத்துக்களும் உளவாக வடமொழியெழுத்தைக் கொண்டு கூறியது, பிறமொழிகள் உலகவழக்கிற்கு உரியனவாதலும், வடமொழி வேதவழக்கிற்குரியதாதலும் கருதியென்க. இக்கருத்தைக் கொண்டே அடுத்தவாக்கிய சோதனை செய்யத்தொடங்கி, 'ஆதிபகவன்' என்னும் இருபெயரொட்டுப்பண்புத்தொகை வடநூன்முடிபு' என்றார்.

இதன்கருத்து, 'அகர முதல வெழுத்தெல்லா மாதிப், பகவன் முதற்றே யுலகு' எனப் பகாவொற்று மிருத்துக்கூறினும் சீர் தளை சிதைவின்றியே கருதியபொருள் வேறுபடாமலும் புணர்ச்சியிலக்கணம் சிதையாமலும் செவ்விதாயும் அமைவதாயிருக்க, அவ்வாறு கூறாது, வாழைப்பழம் என்பதுபோல ஆதிபகவன் எனப் புணர்ச்சியிலக்கணம் சிதையக் கூறுதல் வழுவாதல்நோக்கி அவ் வழுக்களைதற்பொருட்டு வடநூன் முடிபுகொள்ளவேண்டிற்று என்பதாம். இது ஒரு மணமகளுக்குத் தம் வீட்டிலுள்ள அணிகலன்களுடன் அவ்வணிகளினும் சிறிது வேறுபடச்சமைத்த அயல்வீட்டணிகலன்களையும் வேண்டியபொழுதுகொண்டலங்கரிப்பதுபோலத் திருவள்ளுவர் தாம் நுவலக்கருதியபொருளுக்கு வேண்டும்பொழுது வடநூன்முடிபுகளையும் தள்ளாதுகொண்டு அழகுறப்புனைவது தமக்குடன்பாடென்பதை அறிவித்தற்பொருட்டு, 'ஆதி பகவன்' என்ற வடநூன்முடிபை மேற்கொண்டுகூறியது ஞாபகமாயிற்று என்றபடி. இது வேண்டாது கூறி வேண்டியது முடித்தல் என்னும் உத்திக்கினம்.

'இருபெயரொட்டுப்பண்புத்தொகை' என்றது:— ஆதிபகவன் என்பதற்கு ஆதியிலுள்ள பகவன் என்று பொருளோ? அல்லது ஆதியும் பகவனும் என்று பொருளோ? அல்லது ஆதியாகியபகவன் என்று பொருளோ? என ஐயுறவுதோன்ற, அவ்வாறு மயங்காமைப்பொருட்டும், ஆதியாகிய பகவன் எனப் பொருள் இனிதுவிளக்குதற்பொருட்டும் அத்தொடர்மொழி இன்னதென விளங்கக்கூறியவாறு.

முதற்று என்பதில் முதல் என்னும் பகுதிக்கு எடுத்துக்காட்டுவமைக்கியையப் பொருளினும் தலைமைப்பொருள் கொள்ளக்கிடத்தலால் இங்கு ஆதி யென்றதற்கு அத்தலைமைப்பொருளின்வேறாகிய காரணப் பொருள்கொண்டு, 'ஆதியாகிய பகவன்' (காரணரூபியான பகவன்) எனப் பொருள்கொள்ளவேண்டும் என்பதும் கருதினாராயிற்று.

உலகு என்பது உயர்ந்தோரையும் உயிர்த்தொகுதிகளையும், அவ்வுயிர்த்தொகுதிகள் வாழும் நிலங்களையும் உணர்த்தும் பலபொருளொருசொல்லாயிருத்தலால் அப்பொருள்களுள் எதுவோபொருள் என்று



மயங்காமைப்பொருட்டு, 'உலகென்றது. ஈண்டு உயிர்கண்மேனின்றது' என்று விளக்கக்கூறினர்; அக்கூற்றானே எடுத்துக்காட்டுவமையிலுள்ள உவமப்பொருளாகிய எழுத்துக்களின் பன்மைக்கியையப் பொருளினும் உயிர்ப்பன்மைகாட்டி, ஒருமை பன்மை மயங்காமே வழுக்காத்தவாறுமாயிற்று.

இனி, 'காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுளுக்கு உண்மைகூறவேண்டுதலின்' என்று ஒரு நியாயங்காட்டியுள்ளார். இந்த நியாயம் இங்கு எதற்காக எடுத்துக்கூறப்பட்டதென்பதும் ஆராயத்தக்கதே.

கீழ், அதிகாரப்பொருளைவிட்டு விலகிய முதல்வாக்கியத்தை எடுத்துக்காட்டுவமை எனனும் அணியிலக்கணங்கொண்டு வழுக்களைந்தார்; இனி அவ்வெடுத்துக்காட்டுவமைக்கு உவமேயப்பொருளையுணர்த்தவந்த 'ஆதிபகவன்முதற்றேயுலகு' என்ற இரண்டாம்வாக்கியமும் அதிகாரப் பொருளைவிட்டு விலகி, உலகினியல்புகூறுதலால் மற்றொன்றுவிரித்தலாய் வழுவாகாநிற்க, அவ்வழுக் களையவேண்டிக் 'காணப்பட்டவுலகத்தாற் காணப்படாத கடவுளுக்கு உண்மைகூறவேண்டுதலின்' என்று ஒரு நியாயமுடிபை உட்கொண்டு, அங்ஙனங்கூறியதற்குக் காரணம் காட்டினார். அது காரணமாமாறு காட்டுதும்.

இங்கு எடுத்துக்கொண்டபொருள் கடவுள்வாழ்த்து. அது கடவுளின்மேற் சொல்நிகழும் வாக்கியங்களால் ஆக்கப்படவேண்டும். அவ்வாக்கியப்பொருளுணர்ச்சி ஒருவருக்குண்டாகவேண்டுமானால் அவர்க்கு முன்னமே கடவுளின் உண்மையுணர்ச்சி உண்டாயிருக்கவேண்டும் அவ்வுணர்ச்சி உண்டாகாதநிலையிற் பாடல்கேட்பவர்க்கு அவ்வதிகாரப் பொருளைக்கொண்ட வாக்கியப்பொருளுணர்ச்சி உண்டாகமாட்டாது என்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்த துணிபு.

இத்துணிபுபற்றியே புத்ததேவரும், கடவுள் உண்டோ? இல்லையோ? என்று கேட்டார்க்கு, இறிஞ்சிறிஞ்சி உண்டோ? இல்லையோ? என்று கேட்டால் எவ்வாறு பொருள்தோன்றாதோ அவ்வாறு பொருள்

தோன்றுதிருப்பதுபற்றி வாய்வாளாமையை மேற்கொண்டு நிருத்தாராயிருந்தார் என்பதும் இங்கு நினைக்கத்தகும்.

இவ்வாறான உணர்தற்கரியபொருளை உணர்த்தத்தொடங்கிய திருவள்ளுவர், கேட்போர்க்கு, முதன்முன்னமே அம்முதற்பொருளுணர்ச்சியையுண்டாக்கிக்கொள்வதற்கு உரியதோருபாயத்தைக் கைப்பற்றினார். அதாவது: கேட்போரால் அறியப்பட்டிராததொருபொருளை அவர்க்கு அறிவுறுத்தவேண்டுமிடத்து அவரால் முன்பே அறியப்பட்டிருப்பதொருபொருளைக்கொண்டு அவரால் அறியப்பட்டிராதபொருளை அறிவுறுத்தவேண்டும் என்பதே (இது பொதுவாய்பாடு). உதாரணமாக: ஆமா என்னும் சொற்பொருளறியாதானுக்கு (அவனால் அறியப்பட்ட) 'ஆவினை ஒப்பது ஆமா' என்று உபதேசித்தால் அவனால் அறியப்பட்டுள்ள ஆவினது ஒப்புமையுணர்வால் ஆமாவுணர்வு அவனுக்கு உடனே உண்டாய்விடும். அவ்வாறே, புலியறியாதான் ஒருவனுக்கு அவனால் அறியப்பட்ட பூனையைக்கொண்டு, 'பூனைவடிவிற்சிறிதுபெரிதுபுலி' என்று உபதேசித்தால் அவனால் அறியப்பட்டுள்ள பூனைவடிவினொப்புமையால் (புலியைப் பாராதிருக்கச்செய்தே) புலிவடிவம் அறியப்பட்டதாம். இது வாக்கியப்பொருளுணர்வு. இவ்வுணர்வுகொண்டு புலியைக்கண்ட இடத்து 'இது புலி' யென்னும் காட்சியுணர்வு தானே தோன்றிவிடும்.

இம்முறையாலே கடவுள்வாழ்த்து என்ற அதிகாரப்பெயரிலுள்ள கடவுள் என்ற சொல்லின் பொருளுணராதார்க்கு அப்பொருளை முதலில் உணர்த்தவேண்டி அவரால் காணப்பட்டவுலகத்தை (உயிர்த்தொகுதியை)க் கொண்டு காணப்படாத கடவுளுக்கு உண்மைகூறக்கருதி 'ஆதிபகவன்முதற்றே' என உலகின்மேல்வைத்துக்கூறினார் என்றார்.

'ஆதிபகவன் முதற்று' என்றதனாற் கடவுளின் உண்மைகூறுமாறெங்ஙனமெனில்' கூறுதும். முதற்று என்ற பயனிலைச்சொல்லானது முதலையுடையது என்னும் பொருளுடையதாய் உலகு என்ற எழுவாயோடியைந்து, உலகு முதற்று (-உலகு முதலையுடையது) என ஒரு வாக்கியமாயிற்று. இதில் உலகு என்னும் எழுவாய்ப்பொருள் (உயிர்த்



தொகுதி) கேட்போரால் கண்கூடாகக் காணப்பட்டது. முதற்று என்னும் பயனிலைப்பொருளும், ஒவ்வொரு 'வீடும் ஒரு முதல்வனையுடையது, ஒவ்வொரு ஊரும் ஒரு முதல்வனையுடையது, ஒவ்வொரு நாடும் ஒரு முதல்வனையுடையது என்றற்றொடக்கத்து உலகவழக்கால் தலைமைப்பொருளில் அறியப்பட்டிருப்பதுடன், 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற எடுத்துக்காட்டுவமையிலுள்ள முதல என்றதனாலும் அறியப்பட்டுள்ளது.

இவ்வாறாக எழுவாய்ப்பொருளும் பயனிலைப்பொருளும் வேறுவேறறியப்பட்டனவாகவே, அவ்விரண்டறிவின்கூட்டமாகிய வாக்கியப்பொருளுணர்ச்சி தானேஉண்டாகத் தட்டில்லை. அவ்வாக்கியப்பொருளுணர்ச்சியாவது: உலகு (ஒரு) முதலையுடையது, என்பதாம். உலகம் முதலையுடையது எனவே உலகத்துக்கு முதல்வனுண்டு என்பது போந்தபொருளாய் அவ்வுலகமுதற்பொருளின் உண்மையுணர்வு தோன்றும். இது, வாக்கியப்பொருளுணர்வு. இவ்வாக்கியப்பொருளுணர்வு கொண்டு அதிகாரப்பொருளுணர்ந்து கடவுள்வழிபாடுபுரிந்து மனமாசகன்று வாலறிவுண்டாயவழிக் கடவுளின் காட்சியுணர்வு தோன்றும் என்ப.

ஆதிபகவன் என்ற அடைமொழியால் ஆதிபகவனாகிய முதல் என்று பொருள்படுதலால் அம்முதல்வனுக்கு ஆதிபகவன் என்பதும் ஒரு பெயரெனத் தோன்றும்; தோன்றவே, அதிகாரத்தால், எடுத்துக்கொண்ட பொருளாகிய கடவுள்வாழ்த்திற்கு உரியபொருள் உலகிற்கு முதல்வன் என்றும், அவனுக்கு ஆதிபகவன், கடவுள், வாலறிவன், மலர்மிசையேகினான், எண்குணத்தான், அறவாழியந்தணன் முதலிய பெயர்களும் உண்டென்றும் உபதேசித்துக்கொண்டு அதிகாரப்பொருளைக் கூறல் இயலும் என்பதாம்.

இவ்வாறாகக் கடவுளின் உண்மைகூறவேண்டியது இன்றியமையாததாயிருப்பதையும், அவ்வுண்மைகூறும் முறைகளையும் உட்கொண்டு 'காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுளுக்கு உண்மைகூற

வேண்டுதலின் ஆதிபகவன்முதற்றேயுலகு' என்பதனை உலகின்மேல்வைத்துக் கூறினார்' என்று, எடுத்துக்கொண்டபொருண்மேற் சொல்நிகழ்தலின்றி அப்பொருளின்வேறாகிய உலகின்மேற் சொல்நிகழுமாறு கூறியதற்குக் காரணங்காட்டி, (எடுத்துக்காட்டுவமைக்கியைய) உலகின்மேல்வைத்துக் கூறினாரேனும், உலகிற்குமுதல்வன் ஆதிபகவன் என்பதே அவர்கருத்து எனக் கருத்துப்பொருள் கொண்டு வழுக்களைந்தார் என்க.

இவ்வாறாக அவர் அணியிலக்கணங்கொண்டு வழுக்களைதலைப் பின்வரும் குறளுரைகளிலும் காணலாம். 'பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டம், சால மிகுத்துப் பெயின்' என்னும் குறட்பொருளைப் பிறிது மொழிதலென்னும் அலங்காரம் கொண்டு வலிபறிதலென்னும் அதிகாரப் பொருளாக்கினார். அவ்வணிகடைகருதாக்கால் மற்றொன்றுவிரித்தலாம். 'கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடு, நாவாயு மோடா நிலத்து' என்ற குறட்பொருளையும் அவ்வணிகடைகொண்டே இடமறிதலென்னும் அதிகாரப்பொருளாக்கினார்.

சொற்பொருட்பின்வருநிலை என்னும் அணிகடைகொண்டு கூறியதுகூறலைப் பரிகரிப்பர்.

'செவிக்குண வில்லாத போது சிறிது, வயிற்றுக்கு மீயப் படும்' என்னும் குறள் அதிகாரப்பொருளாகிய கேள்வியின்மேற் சொல்நிகழ்ச்சியின்றிக் கேள்வியின் வேறாகிய உணவின்மேற் சொல்நிகழ்தலால் மற்றொன்றுவிரித்தலாவான்செல்ல, அதனை நீக்கவேண்டிப் 'பின்னிருந்து கேட்டற்பொருட்டுச் சிறிதீயப்படு மென்றார்' என்று வயிற்றுக்கு ஈயப்படுமுணவைப் பின்னிருந்துகேட்டற்பொருட்டாக்கி அதிகாரப்பொருளுக்கு உபகாரப்படுத்தி வழுக்களைந்தார்.

இவ்வாறே அவரெழுதும் விசேடவுரைவாக்கியக்கருத்துக்களையெல்லாம் இங்கு விரித்துரைப்பின் மிகப் பெருகும்.

அவருரைத்திறமிருக்கும்படி பலவற்றையும் மனத்துட் கொண்டு பன்முறை படிப்பார்க்கு அவருரையின் கருத்தமைதிபலவும் புலனாகும்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---



# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

## இராவணனைக்குறித்துச் சீதாதேவி சொல்லியவை.

55. *'பெற்றுடை வாளும் நாளும் பிறந்துடை உரனும் பின்னும்
மற்றுடை எவையும் தந்த மலர்அயன் முதலோர் வார்த்தை
விற்றொடை இராமன் கோத்து விடுதலும் விலக்குண் டெல்லாம்
இற்றுடைந் திறுதல் மெய்யே: விளக்கின்முன் இருள்உண் டாமோ?'

இ. ள். '(நீ சிவனிடம்) பெற்றுடைய (சந்திர) வாளும், (மூன்றரைக் கோடி ஆண்டு அளவான ஆயுள்) நாளும், (உன்னோடு கருவில் உதித்து நீ பிறக்கும்போது உன்னோடு கூடப்) பிறந்து (உனக்கு) உடையதான (அபூர்வ தேக) பலமும், (ஆகிய இவைகளும் இவைகள்) அல்லாமல் (இவைகளினின்றும்) வேறாக (நீ தவத்தால் பெற்று) உடைய (பேறுகள்) யாவையும் (உனக்கு) அருளிய (பரமன்) பிரமன் முதலோர் வார்த்தை (யான வரங்கள்) இராமன் வில்லில் அம்பைத் தொடுத்துவிட்டவுடனே (அவைகளுக் கேற்படுத்தப்பட்ட முடிவு காலம்) மாற்றப்பட்டுக் கெட்டு அழிந்து ஒழிந்துவிடுதல் நிச்சயமாகச் சத்தியம்: விளக்குக் கெதிரே இருள் நிற்குமோ? (நின்றால், இராமன் அம்பின்முன்மேற்கூறிய வரங்கள் முதலியவைகள் அழிவுறாமல்நிற்கும்)'

பெற்றுடை, பிறந்துடை, மற்றுடை என்பவைகளில் 'உடைய', 'உடை' என ஈறுதொக்குநின்றது. உரம் என்பதன் விகாரமாகிய உரன், பெலம் என்னும்பொருட்டு. பின்னும் - அன்றியும். பின்னும் இன்னும் அன்றியும் அல்லதூஉம் மற்றும் வேறும் என்பவை ஒருபொருட் பன்மொழிகள் (விராட்டகாசப்படலம் உச—உக—ம் பாட்டுக்களைப் பார்க்க). மலர் அயன் - தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன். வார்த்தை, வார்த்தையால் வழங்கிய வரங்களைக் குறிக்கும். மலர் அயன் முதலியோர் வார்த்தை (யால்) தந்த எவையும் என்று கூட்டிப் பொருள்கூறலாம். இது கடுங் கொண்டுகூட்டு.

*சுந்தரகாண்டத்தில் இதற்குமுந்திய இன்கவிகளும் உரையும் கதைத்தொடர்ச்சியும், 'தமிழர் நேசன்' 'பஞ்சாமிர்தம்' என்ற பத்திரிகைகளில் வெளியாயிருக்கின்றன.

தொடை – அம்பு. வில் தொடை கோத்து – வில்லில் அம்பைத் தொடுத்து. விலக்குதல் - மாற்றுதல் (பிக்கலம்). உடைதல் - அழிதல்; தகர்தல். இறுதல் - கெடுதல்; அறுதல்; முடிதல். இற்று உடைந்து இறுதல் என்ற ஒத்தபொருளுடைய சொற்களின் தொகுதி அழிதலை வற்புறுத்தியதாம். பெற்றுடைவாளும் இற்றிடைந் திறுதல் என்பனவும் பாடங்கள்.

இதன்பின் 60-ம் பாட்டில் இராவணனைநோக்கிச் 'செங்கண்மால் நான்முகன் சிவனென் றே கொலோ - எங்கள் நாயகனையும் நினைந்ததெழை நீ, என்று இராமன் மும்மூர்த்திகளுக்கு மேலானவனென்பாள், (கீழதிகாரிகள் தீர்ப்புக்களை மேலதிகாரிகள் மாற்றவல்லராயிருத்தல் போல,) பிரமன்முதலியோர் வரங்களை இராமன் மாற்றவல்லனாயிருத்தலால் 'அயன்முதலோர்வார்த்தை விற்றொடை இராமன் கோத்துவிடுதலும் விலக்குண டெல்லாம், இற்றுடைந் திறுதல் மெய்யே' என்றாள்.

56\. 'குன்றுநீ எடுத்த நாள் தன் சேவடிக் கொழுந்தால் உன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரம் துரந்த மேரு
என்றுணைக் கணவன் ஆற்றற் குரனிலா திற்று வீழ்ந்த
அன்றெழுந் துயர்ந்த ஓசை கேட்டிலை போலும் அம்மா.'

இ. ள். 'நீ கயிலாயமலையை (வேரோடுபேர்த்து) எடுத்தகாலத்தில், தனது கால்பெருவிரலினால் உன்னை (அழுத்தி) வென்ற சிவன், திரிபுரங்கள் எரிந்துபோம்படி, அம்பு (தொடுத்து) விட்ட மேருமலையாகிய வில், என் (உயிர்த்) துணையான என்நாயகனது வலிமைக்கு (எதிராகத்தாங்கும்) வலிமையில்லாமல் ஒடிந்துவிழுந்த தற்சமயத்தில் உண்டாகிய (உலகமெல்லாம் கேட்ட) பேரொலியை நீ (மாத்திரம்) கேட்கவில்லைபோலும்.'

நாள் – காலம். சே அடி - சிவந்த பாதம். துரந்த - செலுத்திய தனி சரம் - ஒப்பில்லாத அம்பு. துணை - ஆதரவு; உயிர்த்துணை உற்றதுணை யெனக்கொள்ளநின்றது. ஆற்றல் - வலிமை. உரன் - வலிமை; உரம் உரன் என விகாரப்பட்டுநின்றது. இற்று - ஒடிந்து. கேட்டிலை - கேட்டாயில்லை. போலும் அம்மா அசைச்சொற்கள். போலும் ஒப்பில்போலி. அம்மா அதிசயக்குறிப்பு.

'திரிபுரசங்காரகாலத்தில் மேருமலை சிவபெருமானுக்கு வில்லாக அமைந்ததனால், சீதாவிவாககாலத்தில் கல்யாணசுல்கமாக ஏற்பட்ட சிவதனுசையும் அபேதமாக அம்மேருவாகவே கூறினாள்.'



அற்பமான ஒரு புழுவை நசுக்குதல்போல, ஒரு விரலால் உன்னை நசுக்கிய பரமசிவனுடைய பாரமான வில் என் நாயகன் வளைக்கப் பொறுக்காமல், ஒடிந்தபோது உண்டாகிய உரத்த ஓசை, உலகமெங்கும் ஒலித்தது. நீயும் கேட்டிருப்பாய். அவன் ஆற்றல் எங்கே! உன் ஆற்றல் எங்கே! அப்படியிருக்கவும், இப்போது உன்வீரத்தை நீயே மெச்சிய நெடுமொழியை நோக்கினால் அந்தப் பேரொலி உன் காதுக்கு மட்டும் எட்டவில்லைபோலும் என்பது கருத்து.

இப் பாட்டில் 'சேவடிக்கொழுந்து' என்ற அருமையான பிரயோகம் ஆராயத்தக்கது. கால்விரலை ஆனந்தபரவசமடையும்படி புலப்படுத்துகின்ற, கம்பசித்திரட்டியாகிய, 'சேவடிக்கொழுந்து' என்ற, யாம் முன்னூல்களுள் எங்ஙனுங்கண்டிராத, புத்தம்புதிய, கனியினிய சொற்றொடர், கம்பரது அரிய பாவனைவன்மையையும் இன்சொற்றொடுக்கும் திறத்தையும் ஏககாலத்தில் இனிது விளக்குகின்றது. 'குன்று' என்று ஆரம்பித்த அடிக்கு மோனை அமைக்க முயன்ற முயற்சியின் பயனாக, இந்த விழுமிய தொடர்மொழி, கம்பர்கருத்தில், உதித்ததென்பது, இதன் இறுதிச்சொல்லாகிய 'கொழுந்து' மோனைத்தானத்தில் நிற்றலால் விளங்குகின்றது. கொழுந்து, நரம்பு கொடிகளின் முடிவில் தோன்றும் இளந்தளிர். அதுபோலப் பாதத்தின் முடிவில் விரல் இருத்தலைப் பாவனையிற்கொண்டு செந்தீயொத்த சிவந்த திருமேனியுடைய சிவபரஞ்சோதியின் சிவந்த பாதத்தின்முடிவில் செந்தீக்கொழுந்துபோலத்திகழும் செவ்விரலைச் சீதை 'சேவடிக்கொழுந்து' எனச்செப்பினாளென்ற நயம் பாராட்டற்பாலது. வேதமுடிவில் உள்ளவனென்பது குறிக்கும் 'மறைக்கொழுந்து' என்ற பெயர், சிவநாமங்களுள் ஒன்றாயிருத்தல், இங்கே நினைவுகூரத்தக்கது.

57\. 'மலைஎடுத் தெண்டிசை காக்கும் மாக்களை
நிலைகெடுத் தேனெனும் மாற்றம் நேருநீ,
சிலைஎடுத் திறுபவன் நிற்கச் சேர்ந்திலை;
தலைஎடுத் தின்னமும் மகளிற் சூழ்திபோ?'

இ. ள். '(கயிலாய) மலையை(ப் பேர்த்து) எடுத்(தேன், அஃதல்லா)து (இந்திரன் முதலிய) அட்டதிக்குப் பாலகரை நிலை கெடச் செய்தேனென்னும் (வீர) வார்த்தைகளை (இறுமாப்போடு ஆடம்பரமாக)

வழங்குகின்ற நீ, இலக்குமணன் வில்லேந்தி (என்னைக் காத்து) நிற்க, (யான் இருந்தபோது, என்னைக் கவர) வந்தாயில்லை; (ஆண்மையின்றிப் பேடிபோல வஞ்சனைசெய்து என்னைக் கவர்ந்தாய். இவ்வாறாக இழிவடைந்த) நீ, இன்னமும் (வீரன்போலத் தலைநிமிர்த்தவனானால், அதிக இழிவடைவாயென்பதை யறியாமல்) தலை நிமிர்த்து 'ஆண் மகனான நீ) பெண் மகளினும் (கேவலமாகத்) தாழ்வாயோ ?'

மாற்றம் - வார்த்தை. நேர்தல் - தருதல். சிலை - வில். மகளின் தாழ்தியோ - பெண்ணினும் கீழாவாயோ. 'எண்டிசைகாக்கும் மாக்களை' என்பதற்கு அஷ்ட திக்கஜங்களை என்றும் பொருள் கூறுவர்.

'தலையெடுத்து' என்ற வினையெச்சத்தைத் 'தாழ்தியோ' என்ற வினைமுற்றைக்கொண்டுமுடிவதாகக்கொண்டு மேலே உரை கூறப் பட்டது. அவ்வாறுகொள்ளாமல், அந்த வினையெச்சம் 'சேர்ந்திலை' யென்ற வினைமுற்றைக்கொண்டு முடிவதாகக்கொண்டால், தலை யெடுத்துச் சேர்ந்திலையென மாற்றிக்கொண்டு, இலக்குமணனை யெதிர்க் கத் தலைநிமிர்த்து வந்தாயில்லை (அதனால் ஆண்மையிழந்து பெண் போன்றாய்) இன்னமும் (அதிக இழிவாக நடந்து) பெண்களினும் கீழாவாயோ என்று பொருள் கூறலாம்.

மகளிர்த்தாழ்தியோ என்பதும் பாடம். இப்பாடம் கொண்டார் "பெண்கள் காலினும் வீழ்க்கடவாயோ" என்று பொருள்கூறினார்.

58. 'ஏழைநின் ஒளித்துறை இன்னதாமென,
வாழிஎம் கோமகன் அறிய வந்தநாள்,
ஆழியும் இலங்கையும் அழியத் தாழுமோ?
ஊழியும் திரியும்: உன் உயிரோ டோயுமோ ?'

இ-ள். 'அறிவில்லாய் (நீ ஒளித்துக்கொண்டிருக்கும்) மறைவிடம் இதுவாமென்று எங்கள் கோமான் (ஆன இராமன்) தெரியவந்த காலத்தில் (உன்னை அழித்தற்கு உண்டாகும் அவன் கோபம், உனக்கு அரணான இந்த) இலங்கையும் (இதற்கு அரணாக இதனைச் சூழ்ந்துள்ள) கடலும் அழிய(ச் செய்து அம்மட்டோடு) தணியுமோ? (தணியாது; இலங்கையையும் இலங்கையையணைந்த கடலையும் அழிப்பது உன்னை அழித்தற்பொருட்டாதலால் அவைகளை அழித்துப் பின்பு உன்னை அழித்து) உன்னுயிர் போனதோடு (ஆயினும்) தீருமோ ? (தீராது: அக் கோபத்தால்) ஊழியே மாறுதலுற்று (உலகமுழுதுமே முடிந்து) விடும்.'



ஏழை - அறிவிலான். ஒளித்துறை - ஒளித்து உறையும் இடம் - மறைவிடம். வாழி அசை (சிந்தாமணி). கோமகன் - தலைவன். ஆழி - கடல். தாழ்தல் - தணிதல். ஊழி - உகமுடிவுகாலம். திரிதல் - மாறுதல். தாழும் ஓயும் என்ற வினைமுற்றுக்களுக்கு இராமன்கோபம் தோன்றா எழுவாய். அதுவே அடுத்தபாட்டில் வீயும் என்ற வினை முற்றுக்கும் எழுவாய்.

'ஊழியும் திரியும்' என்றது, நெடுங்காலம் கழித்துவரற்பால தாகிய ஊழி (தான் வரவேண்டிய காலம்) மாறி (முன்னதாகவே வந்து) விடும்; வந்துவிடவே, இலங்கையும் இலங்கை சூழ்ந்த கடலுமல்லாத ஏனைய நிலங்களும் கடல்களும் உள்பட உலகமுழுவதும் அக்கோபத்தால் அழிந்துவிடுமென்றபடி. இப்பாட்டில் இக்கருத்து இருப்பது இதற் கடுத்தபாட்டினால் விளங்குதல் காண்க.

'ஒளித்துறை இன்னிடத்தென' 'அறிந்து வந்த நாள்' 'ஊழியுந் தீயும்' என்பன பாடபேதங்கள்.

59. 'வெஞ்சின அரக்கரை விளித்து வீயுமோ ?
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தால்
எஞ்சலில் உலகெலாம் எஞ்சும்! எஞ்சும்! என்
றஞ்சுகின் றேன்! இதற் கறனும் சான்றரோ! '

இ-ள். '(அந்தக் கோபம், உன்னைக் கொல்வதனோடு தீராமல் உன்னைச் சார்ந்த) இராக்கதரைக் கொன்று (அம்மட்டோடு) தீருமோ? (தீராது.) நீ (ஒருத்தன்) வஞ்சனைசெய்துவிட (-கபடஞ்செய்து என்னைத் திருடிவிட, - அதனால் உண்டாகிய) இராமபிரான் கோபத்தால் (இப்போது) குறைவில்லாதிருக்கின்ற உலகம் முழுதும் அழிந்துவிடுமே யென்று அஞ்சுகின்றேன்! யான் இவ்வாறு அஞ்சு (தல் உண்மை யென்ப)தற்கு (என் நெஞ்சன்றி)த் தருமதேவதையும் சாட்சியாகும்'

வெம் சின அரக்கர் - கொடிய கோபத்தையுடைய இராக்கதர். விளித்து - கொன்று. வீயும் - நீங்கும், "வீநீக்கம் பூப்புள்சாவாம்" எஞ்சல் - குறைதல். எஞ்சும் - இறக்கும் - அழியும். எஞ்சும் எஞ்சும் என்ற அடுக்கு அழிவது திண்ணமெனத் துணிவுகுறித்தது. அறன் என்றது அறக்கடவுளை. சான்று - சாட்சி. அரோ ஈற்றசை.

60. ‘அங்கண்மா ஞாலமும் விசும்பும் அஞ்சவாழ்
வெங்கணாய் புன்தொழில் விலக்க மேற்கொளாய்,
செங்கண்மால் நான்முகன் சிவனென் றேகொலோ
எங்கள்நா யகனையும் நினைந்த தேழைநீ.’

இ. ள். ‘மண்ணுலகிலுள்ளோரும் விண்ணுலகிலுள்ளோரும் அஞ்சும்படி (யாக அவர்களுக்குத் துன்பம் செய்துகொண்டு வாழ்) கின்றகொடியோனே! (நீ செய்கின்ற) இழிதொழிலை நீக்குதலைத் தொடங்குகின்றாயில்லை. (உன் அக்கிரமங்களை அடக்க இயலாமலிருக்கின்ற திருமால் பிரமன் சிவன் (போன்ற சாமானியன்) என்றோ எங்கள் தலைவ (னை இராம)னையும் எண்ணினாய்! நீ அறிவில்லாதவன் (ஆதலால் அவ்வாறு எண்ணினாய். திரிமூர்த்திகளுக்கும் மேலானவன் இராமனென்று தெரிந்துகொள்வாயாக)’

அம் கண் மாஞாலம் - அழகிய இடமுடைய பெரிய பூமி. விசும்பு - விண்; விண்ணுலகத்தைக் குறித்தது. ஞாலமும் விசும்பும் ஆகுபெயராய் அவ்விடங்களில் வாழ்வாரை உணர்த்தின. வெங்கண் - கொடுமை. புன்மை - ஈனம். புன்தொழில் - ஈனமான செய்கை. மேற்கொள்ளல் - தலைப்படல் - தொடங்கல். மேற்கொளாய் என்பதற்கு மேற்கொள்வாயாக வென்றும் மேற்கொள்கின்றாயில்லையென்றும் பொருள் கூறலாம்.

இராமன், பரம்பொருளின்கூறுகள் சிலவேயுடைய மூத் தேவர் போலன்றி அவர்களிடத்துள்ள கூறுகளனைத்தும் ஒருசேர உள்ளவன் என்பது பின்னிரண்டடிக் கருத்து. இராமனுக்கு மும்மூர்த்திகளும் ‘அளவி ஒப்பாவரேயன்றி ...... தனித்தனி கிடைப்ப ரோதானை’ என வருதல் காண்க.

61. ‘இருவரோன் றிகழ்ந்தனை யென்னின், யாண்டெல்லை
ஒருவனன் றேஉல கழிக்கும் ஊழியான்?
செருவரும் காலைஎன் மெய்ம்மை தேர்தியால்,
பொருவரும் திருஇழந் தநாயம் பொன்றுவாய்’

இ-ள். ‘(யானோ அளவற்ற படைத்துணை யுடையேன். இராமனுக்குத் துணை இலக்குமணன் ஒருத்தனே. ஆக, இவர்கள்) இருவர்தானே யென்று அலட்சியஞ்செய்வாயானால், (யான் சொல்வதைக்கேள். பிரமன் முதலிய தேவர்கள் அளவற்றோருடன் கூடிய) உலகத்தை உகமுடிவில்



சங்காரஞ்செய்யும் ஊழிமுதல்வன் ஒருவனேயன்றோ? (இனிப்) போர் நிகழும்போது நான் உண்மையே உரைத்தேனென்பதை நீ தெளிவாகத் தெரிவாய். (போரில் தோல்வியடைந்து உனது) ஒப்பில்லாத செல்வத்தை யிழந்து (போவதல்லாமல், அருமையான) உயிரையும் அநியாயமாக இழந்துவிடுவாய்’

யாண்டு எல்லை - ஆண்டுகளின் எல்லை - (யுகங்களின்) ஆண்டுகளின் (முடிவாகிய) எல்லை - யுகாந்தகாலம். ஊழி - யுகமுடிவு. ஊழியான் - ஊழி (யில் நிகழும் சர்வசங்காரத்து)க்கு உரியவன் - சங்கார கர்த்தா - சங்கரன். பொருஅரும் ஒப்பில்லாத. திரு - செல்வம். அநாயமாக என்பது அநாயம் எனச் சுருக்கிக் கூறப்பட்டது. நாயம் அநாயம் என்பவை நியாயம் அநியாயம் என்பவற்றின் விகாரம். பொன்றுதல் - சாதல். ‘விலக்கி’ ‘ஆவி பொன்றுவாய்’ என்பன பாடபேதங்கள்.

இங்கே அநியாயமாகச் சாவாய் என்றது, நெறிவழுவாதிருந்தால் நெடுங்காலம் வாழ்தற்குரிய நீ நெறிவழுவி அகாலமரணம் அடையப் போகின்றாயே என்ற பரிதாபத்தாற் கூறியது; அக்கிரமஞ்செய்வதனாற் சாபவனது சாவு நியாயமன்றென்று கூறியதன்று. தீய வழியிற் செல்வானை ‘அநியாயமாகக் கெட்டுப்போகிறானே’ என்று பரிதபித்துக் கூறும் உலகவழக்கு இங்கே கருதத்தக்கது.

இறுதி யடிக்கு உன் அநியாயத்தால் உன் சொத்தையும் உயிரையும் இழப்பாய் என்று பொருள்கூறுதலும் உண்டு. இப்பொருளுக்கு அநாயத்தால் என்பது அநாயம் என உருபுதொக்கதாகக் கொளல் வேண்டும்.

வேறு.

62. ‘பூவிலோ ஞதி யாகப் புலன்கள்போம் நெறியிற் போகாத்
தேவரோ, அவுணர் தாமோ நிலைநின்று வினையின் தீர்ந்தார்?
ஏவலெவ் உலகும் செய்யச் செல்வம்நிற் கிசைந்த தென்றால்,
பாவமோ, முன்நீ செய்த தருமமோ, தெரியப் பாராய்’

இ-ள். ‘பாவங்களின்று நீங்கி (அழியாமல்) நிலைத்திருப்பவர்கள், (மனத்தை அடக்கி) ஐம்புலவழியிலே செல்லாத தேவர்களோ, (அவ்வழியிலே சென்ற) அசுரர்களோ? (என்று நான் கேட்பதற்கு மறுமொழியாக, நீ “நான் மனத்தை அடக்காமல் என் இட்டப்படியே நடக்கின்றேன். நீ “‘தீவினை’” என்னும் வினையினின்றும் நீங்கிலேன்.

ஆயினும் நான் மூன்றுலகத்தையும் ஆளும் பாக்கியமுடையேனா யிருக்கிறேன்" என்று கூறலாம். நீ கூறுமாறு) எல்லா உலகத்தோரும் நீ இட்டகட்டளையைச் செய்யும்படியாகச் செல்வம் உன்னை அடைந்திருக்கின்றதென்றால், (அப்படி அடைந்திருப்பது,) நீ பிரமன் முதலிய பெருந்தேவரைக்குறித்து அருந்தவஞ்செய்த) நல்வினையினாலோ, (நீ இப்போது மேற்கொண்டிருப்பதுபோன்ற) தீ வி னை யி னா லோ ? (எதனாலென்று) தெரியும்படி ஆலோசித்துப்பார்ப்பாயாக? ('ஆலோசித்துப் பார்த்தால், நல்வினையால் ஐசுவரியம் அடைந்து இன்புறுகின்றாயென்றும், தீவினையால் செல்வமிழந்து துன்புறுவாயென்றும் தெரிந்து கொள்வாய். யான் ஏன் இதன்முன் "வெங்கணாய், புன்றொழில்விலக்க மேற்கொளாய்" என்றேன் என்பது நன்கு விளங்கும்' என்றவாறு.)

பூ இ (ல்) லோன் - தாமரைப் பூவை வீடாக (-இருப்பிடமாக) உடையவன் - பிரமன். புலன்கள், சுவை ஒளி ஊறு (பரிசம்) ஓசை நாற்றம் (மணம்) என்ற ஐம்புலன்கள். அவுணர் - அசுரர். தீர்தல் - நீங்குதல். ஏவல் - கட்டளை - ஆணை. நிற்கு - நினக்கு - உனக்கு. 'நிலை நின்று வினையிற்றீர்ந்தார்' என்பதை 'வினையிற்றீர்ந்து நிலைநின்றார்'எனப் பொருளுக்குப் பொருத்தமாக விகுதிபிரித்துக்கூட்டியிருக்கிறது காண்க.

இரணியன் முதலிய அசுரர்கள் தீவினையுடைமையால் நிலைத்திராமல் இறந்தொழிந்தனர். அவ் அசுரர்கள் வாழ்ந்தபோது அவர்களுக்கு அடிமைகளாயிருந்த தேவர்களோ, தீவினையில்லைமையால் நிலைத்திருக்கின்றனர். தம்மை அடிமைப்படுத்திய அசுரர் இறந்தபின்னும் வாழ்வாராயுள்ள தேவர்கள் அவர்களை அடிமைகளாக உடைய நீ இறந்த பின்னும் நிலைத்திருப்பாரென முற்பாதிக் கவிக்குப் பொருள் விரித்துரைக்கலாம்.

['அகத்தியனாதி முனிவர்கள் எம்பெருமானிடம் வந்து "யாங்கள் இராக்கதர் இயற்றும் கொடுமைகளைத் தாங்கமாட்டாமல் வருந்தித் தவஞ் செய்யமுடியாமலிருந்து வருகின்றோம். அவர்களைக் கொன்று எங்களைக் காத்தருள்வாயாக. உன்னால் அவர்கள் ஒழிந்துபோவது உறுதியாக உண்மையே", என்று கூறியதை நான் நேரே கேட்டேன். அதற்கிசைவாக நீ என்னைக் கவர்ந்து அவனுக்கே கொடுமைசெய்தாய். அம் முனிவர்கள் கூற, உன் வரலாறுமுழுவதுங் கேட்டு, உன்வலிமை



நெடிய ஆயுள் பெரிய சேனை முதலிய எல்லாவற்றையும் நன்கு தெரிந்து கொண்டபின்பே, எங்கோன், உன் தங்கைமூக்கு முதலிய உறுப்புக்களையும் உன் தம்பியர் கரனாதி அவயவங்களையும் சின்னபின்னங்களாகச் சேதித்திருக்கின்றான்.' என்று கூறிச் சீதை பின்னும் கூறுகின்றாள்.]

63\. 'ஆயிரந் தடக்கை யால் நின் ஐந்நான்கு கரமும் பற்றி
வாய்வழி குருதி சோரக் குத்திவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத் தோள்கள் துணித்தவன் தொலைத்த மாற்றம்
நீ அறிந் திலையோ! ஏகும் நெறி அறிந் திலாத நீசா.'

இ. ள். ("உன் நாயகன் பெண்பாலான என் தங்கையையும் சிறுவரான என் தம்பியரையும் வலிதொலைத்தது போல என்னையும் வலி தொலைக்க வல்லானோ? " என்பாயேல், கூறுகின்றேன். கேள்.) தனது ஆயிரங்கைகளால் உனது இருபதுகைகளையும் (இறுகப்) பிடித்து உன் வாய்வழியே இரத்தம்வழியக் குத்திச் சிறையிலிட்ட கார்த்தவீரியார்ச்சுனனுடைய (ஆயிரம்) தோள்களை வெட்டியெறிந்த பரசுராமன் (என் நாயகனால் வலி அழிந்து) தொலைந்த செய்தியை (உலகமெல்லாம் அறியுமே); நீ (ஒருவன்மட்டும்) அறியவில்லையோ!' (இராவணனை வென்றவனை வென்றவனை வென்ற இராமன் இராவணனை வெல்வது மிகவும் எளிதினும் எளிதென்றபடி).

தடக்கை - விசாலமான கை - பெரிய கை. கரம் - கை. குருதி - இரத்தம். சோர - வடிய. வான் சிறை - பெரிய சிறைச்சாலை. தூயவன் - சுத்தன் - களங்கமற்றவன். வயிரத்தோள் - வயிரம்போல வன்மையுடைய தோள்கள். துணித்தவன் - வெட்டியெறிந்தவன். மாற்றம் - சொல். சொற்களால் தெரிவிக்கப்படும் செய்தியை உணர்த்தியது. ஏகும் நெறி அறிந்திலாத நீசா - செல்லுதற்குரிய நல்வழியைத் தெரிந்து கொள்ளாத இழிந்தோனே. 'அன்று ஐந்நான்கு' 'நீதிநெறியறிந்திலாத' என்பன பாடபேதங்கள்.

64\. 'கடிக்கும்வல் அரவும் கேட்கும், மந்திரம் களிக்கின்றோயை
அடுக்குமா றடாதென் றூன்ற அறிவினால் ஏதுக்காட்டி
இடிக்குநர் இல்லை: உள்ளார், எண்ணிய தெண்ணி உன்னை
முடிக்குந ரென்றபோது, முடிவன்றி முடிவ துண்டோ?'

இ-ள். 'கடிக்கப்புகுந்த பாம்பும் மந்திரம் (கூறினால்) கேட்டு (க் கடியாமல்) அடங்கும். (நீயும் தக்க மந்திரம் - ஆலோசனை - கூறவா யிருந்தால், கேட்டுச் செய்யப்புகுந்த தீச்செயலைச் செய்யாமல் அடங்கு வாய்.) இது தக்கது இது தகாது என்று (தமது) நிறைந்த அறிவினால் (அறிந்து எந்தக் காரணத்தினால் எதனையும் தக்கதென்றோ தகாத தென்றோ தாம் கண்டார்களோ அந்தக்) காரணத்தைக் (குறைந்த அறி வுடைய நீயும் தெரிந்து கொள்ளும்படி) காட்டி உறுதிகூறுவார் (ஒரு வரும்) இல்லை. இருக்கிறவர்களோ (தாங்கள் நன்மை தீமைகளை ஆராய்ந்து தெளிந்து உனக்கு நற்புத்திபுகட்டாராய், நீ) நினைப்பதை (த் தாங்களும்) நினைந்து உன்னை முடிவு (-சாவு) அடையச் செய்பவரென் றால், உனக்கு இறுதியாக நேர்வது மரணமன்றி (வேறு) உண்டோ? (இல்லை)' (என்று சீதை தான் சொல்லவேண்டியதைச் சொல்லிமுடித் தாள்.)

மந்திரம் - (செபிக்கும்) மந்திரம்; ஆலோசனை. எளிக்கின்றோயை - மதர்த்துத் திரிகின்ற உன்னை. ஈது - இது. ஈது அடுக்கும், (ஈது) அடாதெனப்பொருந்திப் பொருள்கொள்க. 'உண்ணாமை யுள்ள துயிர் நிலை ஊனுண்ண - அண்ணாத்தல் செய்யா தளறு' என்ற குறளில் 'ஊன்' போல 'ஈது' 'மத்திமதீபம்' என்னும் தாப்பிசைப்பொருள்கோளுக்கு உதாரணமாம். ஏது - காரணம். இடித்தல் - உறுதிகூறல். முடித்தல் - சாகச்செய்தல். முடிக்குநர் - சாகச்செய்கிறவர். என்றபோது - என்றால்; சூர்ப்பணகைப்படலத்தில் 'தாயுரை' என்ற பாட்டில் 'என்றபோது' 'என்றால்' என்று பொருள்பட வருதல் காண்க. 'முடிவது (-இறுதியாக நேர்வது) முடிவன்றி (-சாவல்லாமல்) உண்டோ' என இயைக்க. 'அடாதநீதென் றறிவினால் ஏது' 'ஏதுவோடறிவு' 'இல்லை நீயே' என்பனவும் பாடங் கள்.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

# புத்தகங்களின் பயன்.

வை. சா. வேங்கடராமையர்.

"அறிவுடையார் எல்லாம் உடையர்" என்பர் திருவள்ளுவர். அந்த அறிவு இயற்கையறிவு, செயற்கையறிவு என இருவகைப்படும். இயற்கையறிவு "எழுமையும் ஏமாப்புடைத்து" என்பதற்குப் பொருந் தப் பிறக்கும்பொழுதே அமைவது. செயற்கையறிவு ஆசிரியரின் உப தேசங்களாலும் அறிவுநூல்களின் ஆராய்ச்சியாலும் பெறலாவது.

எவர்க்கும் இயற்கையறிவுமாத்திரமே போதியதாகாது; செயற்கை யறிவும் இன்றியமையாததே. இயற்கையறிவின் ஆற்றலை வளர்ப்பதே செயற்கையறிவின் முதற்செயல். செயற்கையறிவைப்பெறாத இயற்கை யறிவும், இயற்கையறிவோடொன்றாத செயற்கையறிவும் பயனற்றனவே.

மக்களை இத்துணைச்சிறந்தபயனைப் பெறுதற்கு உரியவராகச் செய்பவல்லது யாது? அது புத்தகங்களைப் படித்தல். புத்தகங்கள் என்ற அளவில் இக்காலம் வெளிவருவன எல்லாம் கொள்ளத்தக்கன ஆகா. "அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா, துலகநூல் ஓதுவ தெல்லாம் - கலகல, கூஉந் துணை" என்றாராதலின், கற்கப்புகுமுன் அந் நூல்கள் "வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" கண்டனவும், அந்த இலக்கணங்களுக்கும் வரம்புகளுக்கும் மாறுபடாதனவும் ஆகிக் கற்போர்க்குக் கருத்தை நிறைவிக்கும் சிறந்த அறிவுநூல்களா கவே இருத்தல்வேண்டும் என்பது மறக்கலாகாதது.

"வளம்படவேண்டாதார் யார் யாருமில்லை." அவ்வளம் இம்மை, மறுமைகளை ஒருசேர எய்துவதாம். இவற்றைப் பெறமுயலுவதே ஆறறிவுபடைத்த மக்களது தலைசிறந்தகொள்கையாக இருக்கவேண்டு மாயின், அவற்றைப்பெறத் துணைசெய்வன புத்தகங்களே.

மேலே கூறிய இம்மை, மறுமைப்பயன்களாகிய புகழ், பெருவாழ்வு என்பன அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பெரும்பேறுகளைப் பெற முயலுவதால் கைவருவன. அந்த நான்கின் சிறப்பியல்புகளையும் தம்மைக் கற்போர்க்குத் தெள்ளிதின் விளக்குமாறு அறிவிப்பனவாகிய நூல்களே - புத்தகங்களாம்.

இக்காலத்தில் உலகினர்க்குப் பல துறைகளின் நிகழ்ச்சிகளும் தெரியவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கின்றது. அந்த அவசியம் பூர்த்தியாகவேண்டுமானால், அதற்கு ஆங்காங்குச் செய்யப்பெறும் விரிவுரைகள் போதியன ஆகா. அத்துறைகளின் கருத்துக்களையும், முடிவுகளையும் எளிது இனிது விளக்கக்கூடிய புத்தகங்களே வேண்டியன.

புத்தகங்களைக் கற்றோர் அறத்தின் சிறப்புக்களையும், அதனைச் செய்து பயன்பெறும் துறைகளையும் நன்குதெரிந்துகொள்ளுதல்கூடும். அறம் பலதிறப்படுமேனும் உலகப்போக்கில் ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்பச் செய்யக்கூடியன பல உண்டு என்பதையும், அவற்றைச் செய்து நிறைவேற்றி இன்புறும் துறைகளையும் புத்தகங்கள் தக்க சமயங்களில் சிறிய ஆசிரியர்போலவும் உற்ற நண்பன்போலவும் உடனிருந்து அறிவித்துவருவதைக் கற்போர் அறிவர். ஏனைய முப்பெரும்பேறுகளுக்கும் ஆதியாய்நின்று கைகூடச்செய்யும் அறப்பயனினும் சிறந்தது வேறொன்றுண்டோ?

“பொருளிலார்க் கிவ்வுலகமில்லை” “முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்” “மன்னிய மூன்றன் - நடுவண தெய்த இருதலையும் எய்தும்” என்பனபோன்ற வாக்கியங்களால் பொருட்செல்வத்தின் சிறப்பியல்புகளையும், “செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் - எஃகதனிற் கூரிய தில்” “திரைகடலோடியும் திரவியந்தேடு” என்பனபோன்ற தொல்லுரைகளால் செல்வத்தைத் தேடவேண்டியதன் இன்றியமையாமை, முறை முதலியவற்றையும் மக்களுக்கு அறிவிப்பன புத்தகங்களே. பொருள்பற்றி வேறுபல புத்தகங்கள் பல்வேறு துறைகளையும் விரித்து விளக்குவனவாக வெளிவருகின்றன. அவையெல்லாம் காலத்திற்கேற்ப நல்ல முறையில் செவ்வியநடையினவாய்க் கிடைப்பின், பெரும்பயன் தருவனவே. இத்தகைய புத்தகங்கள் தோன்றிவிடுமாயின் நம்மவரைவிட்டுச் சோம்புத்தனம் விரைந்து நீங்கிவிடும். சோம்புத்தனமில்லாதொழிவதினும் சிறந்தபயனுண்டோ? “மடியிலான் தாளுளாள் தாமரையினாள்.” “உடையரெனப்படுவது ஊக்கம்” என்பவற்றின் கருத்துக்கள் இங்கே சிந்திக்கத்தக்கன.



மக்களுள் ஒருசிலரே பலசன்மப்பழக்கத்தால் துறவறத்தை மேற்கொள்ளுதல் கூடும். மிகப்பலர் இல்வாழ்க்கையினராகவே இருக்க வேண்டியவர். “குடித்தனமோ துறைத்தனமோ” என்பர் சாமானியர். இக்குடித்தனமாகிய இல்லறத்தைப் பாங்காக நடத்தவேண்டுமாயின் “கருத்தொருமித்து ஆதரவுபட்ட” தலைவனும் தலைவியும் வேண்டும். இத்துணைச் சிறந்த அன்புடைமையின் வரலாறு மிகத்தெளிவாக நூல்களில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அத்துறைகளைக் கற்றுணர்ந்த மக்கள் சிறந்த முறையில் இல்லறத்தை நடத்துவார்கள் என்பது ஒருதலை. “இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றில் நின்றதுணை” என்ற சிறப்புப் பெயரைப்பெறும் பேறுபெற்ற இல்வாழ்க்கையினும் சிறந்தது யாது? அப்பெருஞ்சிறப்பை ஆராய்ச்சியுடன் கைக்கொள்ளத் துணைபுரிவன புத்தகங்களே.

இவ்வாறே “காலனை முதற்பூமி கைவந்தால் முத்தியும் கைவந்தாம்” என்றபடி சுபேச்சையாகிய நன்னெறியைக்காட்டி அந்நெறி பிறழாது “சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்தாகிய” வீடுபேற்றையும் சோபானமுறையில் பெறத்தக்க வழிகளை அறிவிப்பன புத்தகங்களே. இவற்றினும் சிறந்த பயன் உண்டோ?

இவற்றையன்றிக் காலத்திற்கேற்ப அரசியல், சமூகவியல் முதலிய பலவற்றின் சிறப்புக்களையும் புத்தகங்களால் அறிந்துகொள்ளலாம். கவலை, துன்பம் முதலியன நேர்ந்தால் புத்தகங்களைத் துணைக்கொண்டு அவற்றைப் போக்கிக்கொள்ளலாம். பிறர் மனம் மகிழுமாறு பல செய்திகளையும் விரித்துக் கூறும் ஆற்றலை அளிப்பன புத்தகங்களே. “கண்ணுடைய ரென்பவர் கற்றோர்” ஆகலின் பலர் முன்னிலையில் குருட்டுத்தன்மையைப்போக்குவன புத்தகங்களே. என்றும் அழியாப் புகழ்பெறுதற்கும் புத்தகங்களே காரணம். “ஒருகுடிப்பிறந்த பல்லோருள்ளும் - மூத்தோன் வருக என்னாதவருள் - அறிவுடையோனா றரசும் செல்லும்” என்பர். அத்துணைச் சிறந்த அறிவினைப்பெற்றுப் பேறுபெறத் துணைபுரியும் புத்தகங்களின்பயன் மிகப்பெரிது. “அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே.”

---

# நவீனதர்க்கம்.

இது -கோயமுத்தூர் கவர்ன்மெண்டு காலேஜில் தத்துவசாஸ்திர போதகாசிரியராயிருக்கும் ஸ்ரீமத் K. R. அப்பாசாமியார் M.A., L.T., அவர்களால் எழுதப்பெற்று அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்டது. இதுகாறும் ஆங்கிலத்தருக்கநூன் முறையைத்தழுவியெழுதி வெளியிடப்பெற்றபுத்தகங்களில் இது புதுமையுடையது. இதனைப்படிப்பவர்களுக்குத் தருக்கவுணர்ச்சியுண்டாவதோடு வாக்கியப் பிழைகளைப் போக்கிக் கொள்ளற்குரிய சொற்பொருளுணர்ச்சியும் எளிதிலுண்டாகும். தருக்கநூலுணர்ச்சியானது சொல்லிலக்கண நூலில் வல்லாரிருப்பதற்குத் துணையாயிருப்பதுடன் மற்றெல்லாப் பொருளையும் எளிதிற்றெளிதற்கேது வாயுமிருக்கிறது. அறிவுவளர்ச்சிக்கின்றியமையாத பொருளுணர்ச்சியையுண்டாக்க வல்லதருக்கநூலுணர்ச்சி நம் தமிழ்மாணவர்களிடத்து மிகவும் அரிதாயிருத்தலால் அத்தகையகுறை தீர்தற்கு இத்தகைய புத்தகங்கள் மெத்தப் பயன் படத்தக்கன. இதனை ஆக்கியளித்த நூலாசிரியர்க்கும் அச்சிட்டுவெளியிட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார்க்கும் தமிழுலகம் நன்றி பாராட்டத்தக்கது.

---

தமிழ்ப்பேரகராதி:—சென்னையுனிவர்ஸிடியாரால் தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப் பெற்றுவரும் இவ்வகராதியின தொகுதி 6, பகுதி 1, இப்பொழுது வெளிவந்துள்ளது. இதில் 'முக்கட் செல்வன்' என்பது முதல் 'மொய்த்தல்' என்பதிறுதியாகவுள்ள தமிழ்ச் சொற்களுக்கு மேற்கோள்களுடன் மிகத்தெளிவாகப் பொருள் விளக்கப்பட்டிருக்கிறது. மிக்க பயனுடைய இவ்வேலை இனிது நிறைவேறி வருதல் தமிழ்மக்களுக்கு மகிழ்ச்சி விளைப்பதாகும். இதன் விலை ரு 2.

விலாசம்—Messrs C. Coomaraswami Naidu & Sons., George Town, Madras.

---



வியாசம் எழுதும் முறை:—இப்பெயர்கொண்டபுத்தகம் புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ்தமிழாசிரியர், ஸ்ரீமாந், பண்டித ஸா. கனகராஜையரவர்களால் இயற்றப்பெற்றது. ஹைஸ்கூல்மாணவர்களுக்குரியதாய், துரைத்தனத்தார் திருத்திவெளியிட்ட புதியபாடத்திட்டத்திற்கிணங்க ஆசிரியர் இதனை அமைத்திருப்பதாகத்தெரிகிறது. சிறுவர்களை வியாசமெழுதப்பழக்குவதில் இது சிறந்தகருவியாய் உதவுந்தரத்தது. மற்றும் தமிழ்மொழியில் மிக்கபயிற்சியில்லாதவரும் இப்புத்தகத்தைப் படிப்பதால் பிழையறப்பேசவும் எழுதவும் வல்லுநராதல்கூடும். விலை அணா 12. விலாசம்—"T. G. கோபால்பிள்ளை, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

---

விசுவநாதநாயக்கர்—இப்பெயருள்ள புத்தகமும் ஷை ஸா. கனகராஜையரவர்களாலெழுதப்பெற்றதே. சமீபகாலத்திற்குமுன் தமிழகத்தில் அரசுபுரிந்த நாயக்கவமிசத்தவருள் முதன்மைவாய்ந்த விசுவநாதரின் சரித்திரம் இதில் அடங்கியுள்ளது. சரிதவாராய்ச்சியிற்றேர்ந்த அறிஞர்களின் கருத்தைப்பெரும்பாலும் தழுவி, சில புதுமைவரலாறுகளும் இதில் இடையிடையே புகுக்கப்பட்டிருக்கின்றன. பள்ளியிற்பயிலும் மாணவர்களுக்கு உள்ளக்கிளர்ச்சியுண்டாகுமாறு எழுதப்பெற்ற இது சிறந்த பாடப்புத்தகமாகத்தக்கது. விலை அணா 9

விலாசம்—"T. G. கோபால்பிள்ளை, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

---

தமிழ்நூற்கோவை* (1) முதற் பகுதி, (2) ஷை இரண்டாம் பகுதி—இவ்விரண்டு புத்தகங்களும் தனித்தனி ஷை கனகராஜையரவர்களாலே தொகுக்கப்பெற்றவை. இவற்றில் முதற்பாகம் நான்காம் பாரத்திற்கும், இரண்டாம் பாகம் ஐந்தாம் பாரத்திற்கும் பாடப்புத்தகமாகத்தக்கன. இவற்றின்செய்யுட் பகுதிகள் சிறந்த முறையிற்றிரட்டப்

பட்டுள்ளன. உரை நடைப்பகுதிகளும் பழமையும் புதுமையும் தழுவிய பொருள்கள் கொண்டனவாய்த் தக்க அறிஞர்களாலெழுதப் பெற்றனவேயாம். ஆகையால் ஆங்கிலக் கலாசாலையதிகாரிகள் மாணவர்களின் தமிழ்ப் பாடபுத்தகமாக இவற்றைத் தேர்ந்தெடுத்தாக்கியோருக்கு ஊக்கமளித்தல் விரும்பற்பாலது. விலை—முதற் பகுதி அணா 10, இரண்டாம் பகுதி அணா 12.

விலாசம்— "T. G. கோபால்பிள்ளை, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

---

தமிழிலக்கியம் (தற்காலம்) என்ற புத்தகம் ஸ்ரீமத். A. V. சுப்பிரமணிய அய்யாவர்களால் எழுதப்பெற்றது. இதற்குத் தமிழரின் கல்வளத்தைப்பற்றி ஒரு வியாசம் முகவுரையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் தெளிவான தமிழ்நடையிலெழுதப்பட்டிருக்கிறது. 'இந்த நூலின் கருத்துக்களை எல்லோரும் ஒப்புக்கொள்வார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை" என்று நூலாசிரியரே எழுதியிருந்தபோதிலும் எல்லோரும் வாங்கிப்படிக்கத்தக்கது. இதன் விலை ரூ. 1-0-0. வேண்டுவோர் திருநெல்வேலி சாரதா அச்சு கம்பெனியிற் பெறலாம்.

---



## இடை வினாதல்.

84. மிடியைத் துரத்துங் கலைசைத் தியாகர் வியன்கிரிமேல்
பிடியைக் கடந்த நடையுடை யீர்நற் பெரியதன
முடியைத் தரித்துநற் பூபாரங் கொண்டு முறைநிறுத்தும்
கொடியயைக் காத்துவைத் தீரென்ன காரணங் கூறுமினே. (கசு)

## வழி வினாதல்.

85. எவ்வழி யுஞ்சமுன் றேங்கிக் கிடந்த வெமக்குமலத்
தெவ்வழி வித்தருள் செய்தார் கலைசைத் தியாகர்வெற்பில்
மைவழி கூந்தன் மயிலனை யிரங்கி வந்திடுமுன்
செவ்வழி யொன்றுரை யீரினி யான்மெலச் செல்வதற்கே. (கஎ)

## மொழியாமை வினாதல்.

86. காவாமற் காக்குங் கலசத் தியாகர் கலைசைபன்னீர்
ஆவா வுழையுழை மேயச் சுகஞ்சுக மாரவிங்கே
ஓவா வினைவுடை யேற்கு வயாவைத் தொருகுமுதப்
பூவாய் திறந்துரை யாடா வகையென் புகன்மின்களே. (கஅ)

## யாரேயிவர் மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்.

87. சிங்கியங் கண்டர் கலைசைத் தியாகர் சிலம்பகநீர்
தங்கிய வூரேது நும்பெய ரேதென்பர் தைத்தவண்டோ
டுங்கிடம் போந்ததுண் டோவென்பர் வாய்திறந் தொன்றுரையா
திங்கித மென்னென்ப ராலிவ ரரெண்ணம் யாதிவர்க்கே. (ககூ)

---

84. தன முடி - கொங்கையாகிய முடி, பொன்னாலாகிய முடி. பூ பாரம் - பூவாலாகிய கனம், பூமிபாரம். கொடி - கொடிபோன்ற இடை, துவசம். பொன்முடியைத் தரித்துப் பூமியாகிய பாரத்தை ஏற்றுக்கொண்டும் துவசத்தை மறைத்ததற்குக் காரணம் யாதோ என்பது வேறுபொருள். பி-ம். "நம்பெரிய"

85. மலத்தெவ் அழிவித்து - மலமாகிய பகையை அழியச்செய்து. செவ்வழி - செவ்விய வழி; ஒருபண்; அது மாலைக்காலத்திற்குரியது.

86. ஆவா: இரக்கக்குறிப்பு. உழை உழை மேய - மான்கள் பக்கத்தில் மேய. சுகம் சுகம் ஆர - கிளிகள் இன்பத்தை நிறையப் பெற; "சுகமே சுகமே இரும்" (அருணைக்கலம்பகம்.) வயா - வருத்தத்தை.

87. சிங்கி - விடம். வண்டு - அம்பு. இங்கிதம் - குறிப்பு.

### எண்ணம் தெளிதல்.

88. காற்றயி லுகர் கலசத் தியாகர் கலைசைமணல்
ஊற்றம்பெனமிகும்வேட்கைகொண்டேயிவரோன் றன்பினொன்
றேற்றம தாக விஞைய்நிற்ப ராலிவை பெண்ணிவங்கால்
தேற்றம தாரு மிவள்பொருட் டேயென்றென் சிந்தனைக்கே. ()

### இருவருமுள்வழி ஒருமையிற் போதல்.

89. கம்மலர் தீர்க்கும் கலைசைச் சிதம்பர நாதர்வெற்பில்
செம்மல ரோன்பெற்ற சித்தியும் புத்தியும் சேர்ந்திருந்தாங்
கம்மது வார்பொழி லம்மட வார்மணந் தாரவர்க்கண்
டெம்மனத் திட்டமெல் லாஞ்சொல்ல வேகல்ல வேல்லையிதே.

### கையுறையேந்திநின் றவ்வகை வினுதல்.

90. அரையொன் று நாகர் கலைசைத் தியாக ரறைபருவி
வரையொன் று குன்றத்தி லென்கைச் சிலீமுக நேர்ந்ததைப்பப்
புரையொன் று தண்பனிக் காலத்திற் றாமரை போன்றுறுதா
மரையொன் று வந்ததுண் டோமட விருக்கள் வார்புனத்தே. ()

---

88. காற்றை உண்ணுகின்ற பாம்பை அணிந்தவர். மணல் ஊற்று அம்பென - மணலூற்றில் ஊறுகின்ற நீர்போல; "ஊற்று மணலெனத் தன்னடிக் கென்னெஞ்சநுகிடச்செய், கோற்றொடி பாகன்" (கோடீச்சுரக். 402.) இவள் பொருட்டே யென்று தேற்றமதாகும்; தேற்றம் - தெளிவு.

89. சித்தியும் புத்தியும் விநாயகருடைய தேவிமார்களின் திருநாமங்கள். மனத்து இஷ்டம். எல்லை - காலம்.

90. அரை - இடை. அறை - முழங்குகின்ற. சிலீமுகம் - அம்பு. புரை - குற்றம். பனிக்காலத்தில் தாமரை கருகும்; "தாமரை முகங்கள் வாட்டுந் தண்பனிக் காலம்" (நைடதம்.) தாம் மரை ஒன்று - தாவுகின்ற மரையென்னும் மிருகம் ஒன்று.



### பாங்கி எதிர்மொழி கொடுத்தல்.

91. செஞ்சா ணன்பர்க் களிப்பார் கலைசைத் தியாகர்மகிழ்
பஞ்சாம் பொன்சொரி தண்டக நாட பனிப்புறத்தைக்
குஞ்சரத் தோடொரு குஞ்சர மஞ்சிக் குருதிபொங்க
மஞ்சர வஞ்செய் புனத்தெங் களுவிலும் வந்திலதே. (உக

### பாங்கி இறைவனை நகுதல்.

92. தெய்ந்தறுண் சிற்றிடை யாய்தென் கலைசைத் தியாகர்வெற்பின்
பாய்ந்தசின் கேறன்னர் மாம்பத் திரமெனும் பத்திரத்தால்
காய்ந்தவ ராகமன் றோர்திண்ண னாய்ந்த கைக்ககத்தான்
மாய்ந்தவ ராகத்தின் மேலாஞ் சதிரின் மறைந்ததுவே. (உச)

### பாங்கி மதியினில் அவரவர் மனக்கருத்துணர்தல்.

93. வட்டையை நீக்குங் கலைசைத் தியாகர்வெற் பேந்துதினைக்
காட்டைப் புரக்குங் கருத்தே யிவட்கின்றிக் காவலர்மா
வேட்டைக்கு வேட்ட வருமல்லர் கூட்ட விருப்பமனப்
பூட்டைத் திறந்தினி தாக்காட்டு மாலிவர் பூங்கண்களே. (உரு

---

91. பஞ்சாம் - செருந்திமரம்; "செருந்திபொன் சொரிதரும் திருநெ[illegible] வேலியுறை செல்வர்தாமே" (தேவாரம்.) தண்டகநாடு - தொண்டைநாடு பனிப்புறத் தைக்கும் சரத்தோடு - நடுக்கும்படி தைத்த அம்போடு. குஞ்சரம் - யானை. மஞ்சு அரவம்செய்.

92. மாம்பத்திரம் எனும் பத்திரத்தால் - மாவிலை என்னும் வாளால். பத்திரம் - இலை, வாள். காய்ந்த வராகம் - கோபித்த பன்றி. திண்ணனார் - கண்ணப்பநாயனார். ககம் - அம்பு. சதிரின் - திறமைப்பாட்டால்.

93. வட்டை - தளர்ச்சி. வேட்டவரும் - விரும்பியவரும். கூட்டம் கூடுதல். பூட்டை - பூட்டினை.

## 10. பாங்கியிற் கூட்டம்.

### தலைவன் உட்கோள் சாற்றல்.

94. செங்கே ழிதழிக் கலைசைத் தியாகர் சிலம்பிலுமக்
கிங்கேய் கவண்வைத் தெறிவான்சிந் தாமணி யென்பதுவும்
சங்கேந்தி மார்பின் மணியுங் கொணர்ந்து தரவும்வல்லேன்
பங்கே ருகமனை யீரென்னை யாளும் பணிவிடைக்கே. (க)

### பாங்கி குலமுறை கிளத்தல்.

95. நாரங்கொள் வேணிக் கலைசைத் தியாகர்நன் னாட்டிறைவா
ஆரங்கள் வேட்டவர் நற்றாகந் தாதி யணிவரல்லாற்
பீரந் தருமலர் வேண்டு வாரோநின் பெரும்பிணையல்
பாரம் பரியமன் றூற்றூட்ட லென்குறப் பைங்கொடிக்கே. (உ)

### தலைவன் தலைவிதன்னை உயர்த்தல்.

96. மருப்பொதி சோலைக் கலைசைத் தியாகர் வரையடவீர்
விருப்பொ டருணை கிரிநாத ரன்று விதம்விதமாப்
பொருப்புறை வேலவர் வள்ளியொ டாடிறும் பூதுரைத்த
திருப்புகழ் கேட்டறி யீரோ விஃதென்னை செப்பியதே. (௩)

### பாங்கி அறியாள்போன்று வினாதல்.

97. ஆடிய பாதர் கலைசைத் தியாகர்வெற் பாடருவி
ஓடிய பைஞ்சுனைச் செங்கழு நீர்பறித் தொண்குறிஞ்சி
பாடியங் காவிற் பயிலுமின் னார்களெம் பார்த்திபனே
கோடியின் மேலுளர் யாருன துள்ளங் குழைத்தவரே. (௪)

---

94. கேழ் - நிறம். இதழி - கொன்றை. ஏய் கவண் - பொருந்திய கவணில். சங்கேந்தி - திருமால். மணி - கௌத்துப ரத்தினம். பங்கேருகமாகிய மனையையுடையீரென்றான், தலைமகளைத் திருமகளாகப் பாவித்து.

95. நாரம் - நீர்; என்றது கங்கையை. ஆரங்கள் வேட்டவர் - சந்தனத்தைப் பூசவிரும்பியவர். பீரந்தருமலர் - பீர்க்கம்பூ; இது தலைவிக்கு உவமை. பாரம்பரியம் - பரம்பரைக்கு உரியது.

96. மரு - மணம். இறும்பூது - வியப்பு.

97. குறிஞ்சி - குறிஞ்சிப்பண்.



### இறையோன் இறைவிதன்மை இயம்பல்.

98. மகமேரு வில்லர் கலைசைத் தியாகர் வளர்கலைசைச்
சுகமே மொழிகிஞ் சுகமே யிதழா சுகம்விழிபன்
னகமே மருங்கு னகமே தனதட நன்றிகொன்றூர்
அகமே குழன்முண் டகமேபொற் பாதமென் னாருயிர்க்கே. (௫)

### பாங்கி தலைவியருமை சாற்றல்.

99. வெள்ளாறு சூடுஞ் சிதம்பர வீசர் வியன்கலைசை
வள்ளா லெமது நகராச னீன்ற வாமயிலைத்
தெள்ளார் கலியினிற் றிங்களின் பின்வரு சீரணங்கை
எள்ளா வெளியளென் றெண்ணுதி போலு மிதயத்திலே. (௬)

### தலைவன் தலைவி இன்றியமையாமை இயம்பல்.

100. அரக்கவி ரம்பலஞ் செவ்வா யணங்கனி யார்கலைசை
புரக்கவல் லாரெஞ் சிதம்பர வீசர்மெய்ப் போகமென்னும்
சாக்கறை யாயின தையலை நீதமி யேற்களிக்க
இரக்கமுன் பால்வரு மேனிற்கு மாலுயி ரென்றனுக்கே. (௭)

### பாங்கி நின்குறை நீயே சென்றுரையென்றல்.

101. அண்டர்கொண் டாடுங் கலைசைத் தியாக ரருணைவெற்பா
வண்டலர் போதகந் தானேசென் றூதும் வகையதுபோல்
கொண்டலங் கோதைக்கு நீயேசென் றுள்ளக் குறையையெல்லாம்
கண்டறை மோவெம்ம னோரின்ன கூறல் கடவதன்றே. (௮)

---

98. சுகம் - கிளி. கிஞ்சுகம் - முள்ளுமுருக்கைப்பூ. ஆசுகம் - அம்பு. பன்னகம் - பாம்பு. நகம் - மலை. நன்றிகொன்றூர் அகம் (-மனம்) இருண்டிருக்கும். முண்டகம் - தாமரை.

99. வெள்ளாறு - கங்கை. நகராசன் - மலைக்குத் தலைவன். ஆர்கலியினில் - கடலில். அணங்கென்றது திருமகளை. எள்ளா - இகழ்ந்து.

100. அரக்கு - செந்நிறம். சாக்கறை - பொக்கிஷம்; "சாக்கறை யோவென் றனிநெஞ்சமே" திருநா. தே.

101. வண்டு: எழுவாய். அலர்போது அகம் - மலர்கின்ற மலரினுள்ளே. அறைமோ - சொல்வாயாக; மோ: முன்னிலையசை.

## பாங்கியைத் தலைவன் பழித்தல்.

102. தோட்டார்குழலிக்கென்சோர்வையெல்லாஞ்சொல்லித்தோயுமின்பம்
கூட்டா யெனவுன்னை யானிரந் தேனெதிர் கூறித்தொண்டை
நாட்டார் கலைசைத் தியாகேசர் பாதத்தை நாடிப்பற்ற
மாட்டார் நிலைமையொத் தாயிது வோவுன் மதிநுட்பமே. (௯)

## பாங்கி பேதைமை ஊட்டல்.

103. இதைக்குறு வேலிக ணூட்டவென் கோட்டுக் கிருங்கரியை
வதைக்குந்தன் கேளிர் மறம்போல வஞ்சியும் வன்சமனை
உதைக்குஞ் சரணர் கலைசைத் தியாகரை யுன்னலர்போல்
பதைக்கும் பிறாணுக் கதெரி பாத பரிசினளே. (௧0)

## காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்.

104. ஆலைக் கழனிக் கலைசைத் தியாக ரணிவரைமேல்
சோலைக் கிடைவந்து சேர்ந்துநின் றேற்குச் சுவைமொழியாம்
பாலைப் பவளவள் ளத்து டளித்துப் பசிதணித்த
மாலைக் குழலியை நீயறி யாளெனன் மாலுரையே. (௧௧)

## பாங்கி முன்னுறுபுணர்ச்சி முறையுறக் கூறல்.

105. தேனேறய் யானக் கலைசைத் தியாகர் சிவநகர்சீர்
தானேசென் றூடினன் பின்பாட வோர்துணை தான்கொள்வனோ
மீனேயு நோக்கி யுனக்கன்ன னாயிடின் மேலும்வெற்பா
ஊனே யுயிரென்ன வொன்றாகி பொன்றாக வுங்களிலே. (௧௨)

---

102. தோடு - பூவிதழ். கூட்டாய் - கூட்டுவாய். தொண்டைநாட்டில் ஆர்ந்த.

103. இதை - புதுக்கொல்லையில். அனுக்கம் - வருத்தம்.

104. ஆலை - கரும்பு. பவளவள்ளமென்றது வாயை. மாலுரை - மயக்கத்தால்வந்த சொல்.

105. தேன் - வண்டு. ஆடினன் - மூழ்கிய ஒருவன்.



## தலைவன் தன்னிலை சாற்றல்.

106. தென்னூர் கலைசைத் தியாகேச ருக்குத் திருவசந்த
நன்னாளிற் சீதள வுற்சவஞ் செய்பவர் நல்லன்புபோல்
இன்னா னெமக்கன்பு வைத்துப சாந்த மெதுசெய்பினும்
என்னு மின்னைநத் தழுவச்செய் யாவிடி னேந்திழையே. (௧௩)

## பாங்கி உலகியல் உரைத்தல்.

107. கட்டா ரழகினைக் காமுறி னீயுண்மை காட்டிருபத்
தெட்டா கமஞ்சொல் கலைசைத் தியாக ரிமயப்பெண்ணைத்
தொட்டானைத் தந்திரு நாணணிந் தாங்கிந்தத் தொல்லுலகில்
பட்டாங்கி லுள்ள படியே வரைந்துகொள் பார்த்திபனே. (௧௪)

## தலைமகன் மறுத்தல்.

108. திருந்தார் புரந்தழற் கிட்டார் கலைசைத் தியாகர்வெற்பில்
பெருந்தாகங் கொண்டுழல் வானைக் குளந்தொட்டுப் பின்புதுநீர்
அருந்தாங் கெனச்சொன்ன வாதர வாகு மணங்கனையாய்
வருந்தாதம் மாதை மணம்புரிந் தாடென்ற வாய்மொழியே. ()

## பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்.

109. பாங்காடும் வேட்டைக் கெமர்வரு வாரவர் பார்க்கின்வெகு
தீங்காய் விளையு நிசிவந்தி யாங்களுஞ் செல்குவமால்
பூங்காவி லேறுங் கலைசைத் தியாகர் பொருப்பிலினி
ஏங்காம லிப்புனம் விட்டைய நீயு மெழுந்தருளே. (௧௬)

---

106. தென் - தென்னை, அழகு. வசந்தநன்னாள் - வஸந்தோத்ஸவதினம். மின் என்றது தலைவியை.

107. கட்டாரழகு - பேரழகு. இருபத்தெட்டு ஆகமங்களைச் சொல்லிய. திருநாண் - மாங்கலியம். பட்டாங்கிலுள்ளபடியே - உண்மைநூலிலுள்ளவாறே; "மாவேத நீதி யொழுகல்பட் டாங்கிந்த வையகத்தே" (திருவாவடுதுறைக் கோவை, 110); "பட்டாங்கி லுள்ள படி" நல்வழி.

108. குளந்தொட்டு - குளத்தைத் தோண்டி. அருந்து - உண்க. ஆடு - கூடுவாயாக.

109. ஆடும் - விளையாட்டாகச்செய்யும். செல்குவம் - செல்வேம். மால் - மேகம்.

### தலைவன் கையுறை புகழ்தல்.

110. தன்கையிற் கங்கொள் கலைசைக் கலசவு தாரன்வெற்பில்
மின்கையிற் கொண்டு தரிக்கத் தருமொரு வேடன்கண்ட
தென்கயி லாயம் வடகயி லாயத்துஞ் சீர்த்திகொண்ட
தென்கையிற் பூந்தழைக் கொப்பாந் தழையில்லை யெங்கணுமே

### பாங்கி கையுறை மறுத்தல்.

111. வானுடர் சூழுங் கலைசைத் தியாகர் வளரும்வெற்பா
கானூர்நின் கைத்தழை மானுள்பொற் றோல்குற் காணிலெமர்
ஆனு தயிர்ப்பரிக் குன்றத்த தன்றிதென் றையுறவு
நானு விதங்கொள்வ ராலிது வாங்குத னன்மையன்றே. (கஅ

### ஆற்ரு நெஞ்சினோடு அவன் புலத்தல்.

112. முருகுஞ் சுரும்புஞ் செறிகுழ லாள்பத மூன்றுமன்பு
பெருகுநம் பாலென் றிருந்தநெஞ் சேகடம் போன்பர்கண்
டுருகும் படிசெய் கலைசைத் தியாகரை யுன்னலர்போல்
கருகும் படிநம்மி னிம்மாந் தழைசெய் கருமமென்னே. (கக

### பாங்கி ஆற்றுவித்தகற்றல்.

113. தெருள்வான் கலைசைத் தியாகேச ரன்பரிற் செப்பியம்மான்
அருள்வாங் குவதுந்தி யெல்லா யிரங்காத் தலடைந்த
இருள்வாங்கி யாங்கெழும் போதிங்கு வாவந் திரவலருன்
பொருள்வாங்குதன்மையின்வாங்கிக்கொள்வேனின்கைப்பூந்தழையே.

---

110. கம் - தலை. கலசவுதாரன் - கலசத்தை அளித்தவர். மின் - தலைவி வேடன் - கண்ணப்பநாயனார். தென்கயிலாயம் - திருக்காளத்திமலை. தழையின் உயர்வு 128-ஆம் செய்யுளிலும் இங்ஙனமே கூறப்படும்.

111. அயிர்ப்பர் - சந்தேகிப்பர். இது இக்குன்றத்தது அன்று என்று. நானாவிதம் - பலவிதம்.

112. முருகு - வாசனை. பதம் மூன்றும் - முக்காலத்திலும். பெருகும் - பெருகுவான். நம்மின் - நம்மைப்போல. கருமம் - தீவினை.

113. அன்பரின் - அன்பரைப்போல. அம்மான் - அத்தத்தலைவியினது உந்தி - கடலில். எல் - சூரியன். காத்தால் இருளை வாங்கி; கரம் - கிரணம்



1757. இப்புலவர் முகமதியமார்க்கத்தவர்; சேதுபதிகளிற் புலவராய்ப் பல ஊர்கள் முற்றூட்டாகப் பெற்றவர். அனந்தன் - பிரமன் (பிங்.).

1758. கல்லை - தையலிலை; 'சருகிலையிணைத்த கல்லை' என்ப (பெரியபு. கண்ணப்ப. 111).

1759. முத்துராமலிங்கசேதுபதியாட்சியில் (கி. பி. 1792) புகழ்பெற்ற பிரதானியாக விளங்கிய இப்பிள்ளையின் தமிழ்ப்புலமை இப்பாட்டால் விளங்கும்.

1760. காக்கைகுளம் - சேதுபதிநாட்டைச் சார்ந்தது. மதுரகவி - இசைப்பதங்கள் பாடுவதிற் புகழ்பெற்ற அந்தணர். ஆரணன் - திருமால்.

1761-2. சிற்றம்பலவையா என வழங்கப்படுவர். மருதூர் - சேதுநாட்டைச்சார்ந்த கபிலர்கோவில் என்ற சிவதலம்; மருதூரந்தாதி இத்தலம் பற்றியமைந்ததாம். கம்பைநகர் - சேதுநாட்டுச் சிறுகம்பையூர்.

1766. பத்து ரூப ஆயன் - தசாவதாரமெடுத்த திருமால். வேந்தன் - ஞானசம்பந்தர். வீழிவாய் - வீழிக்கனிபோலும் வாய்; 'வீழிச்செவ்வாயார்' என்ப (உத்தரரா. அசுவமே. 34).

1767. கிழை - கீழூர். 1768 இவர் தக்கைஇராமாயணம் பாடிய எம்பிரான்கவிராயரின் மனைவி என்றும் புலமைவாய்ந்தவர் என்றும் கூறுவர் (கொங்கு. சத. 65, குறிப்புரை).

1769. நம்பிகாளியாரைப்பற்றிய செய்தியை 1149-ம் பாடற் குறிப்பிற் காண்க. இப்புலவர்பெருமான் முருகக்கடவுளின் பேரருளைத் துணைக்கொண்டு கெருடூரில் இதனைப் பாடினர் என்பர். (கொங்கு. சத. 78).

1770. இவர் யாழ்ப்பாணம் ஆண்ட ஆரியசக்கரவர்த்திக்கு மந்திரியாக விருந்தவர் என்றும், மாவிட்டபுரத்துக் கோவில் அருச்சகரான சின்னமனத்தார் அரசருடன்கூடத் தமக்கிட்ட விருந்துக்கு உவந்து இது பாடினர் என்றும் வரலாறு கூறுவர்.

1771. இவர் 200-ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் என்றும், புலியூரந்தாதி இவரால் இயற்றப்பட்டதென்றும் கூறுவர்.

1772. இப்புலவர்பாடிய கயிலாயமாலை கலிவெண்பாவில் அமைந்தது; யாழ்ப்பாணத்தில் முன்காலத்து நிகழ்ந்த குடியேற்றவரலாற்றை விரித்துரைப்பதாம்.

1773. இவர் சோணாட்டிலிருந்து வந்தவர் என்பர். காரணிகன் - நியாயவாதி: கருணிகர்குலத்தவன் எனினும் அமையும்.

1774. இவர் பாடிய நிகண்டு 12-தொகுதிகளும், 737 கவித்துறைகளும் கொண்டதென்றும், 'பாதவஞ்செய்பாரதி' 'செழுமுனிபாரதி' என்று இவர் சிறப்பிக்கப்படுதலால், இவர் துறவியாய்ப் பரமானந்தபாரதி என வழங்கப் பெற்றனர் என்றும், இவரது பூர்வாச்சிரமநாமம் வேங்கடநாதர் என்றும் தெரிகின்றன.

1775. பாகைப் புன்னைவனநாதன் - ஒப்பிலாமணிதேசிகரைக்கொண்டு சிவரகசியம் பாடுவித்தவருள் ஒருவர்; 1951-ம் பாடற்குறிப்புப் பார்க்க.

1782. இப்பாட்டினின்று முருகையக்கவிராயர் என்ற புலவரைக்கொண்டும் பாடுவித்து இப்பாரதத்தை நல்லகவிராயர் முடித்தவர் என்பது தெரியலாம். கார்பிணைபாவரும் முல்லைக் குடையான் - கார்காத்த வேளாளர்மரபில்வந்த முல்லைக்குடையார் என்ற கோத்திரத்தவன்.

1783. பாண்டிநாட்டுத் திருக்கோட்டியூர்க்குப் புலவர் நடுநிசியில்வந்து, தோடியில் தங்கிப் பட்டினியால் வருந்தியபோது கோயிலார் பிரசாதங்கொண்டு வந்து இவர்க்களிக்க அப்போது பாடியது.

1785. எட்டயா - எட்டயபுரமன்னனே! பேரையா - பேரையூர்த் தலைவனே!

1787. இப்புலவரூர் புதுப்பாகை என்பதும், மந்திரிகள் வமிசத்தவர் என்பதும், 864-விருத்தங்கள்கொண்ட காவியமாக இவ்வேதாளகதை பாடப்பட்டதென்பதும் இப்பாடலால் விளங்குகின்றன. தர்முகிவருஷம் இந்நூல் முடிவுற்றதென்பதனால், 180 அல்லது 240-ஆண்டுகட்குமுன் இஃது இயற்றப்பட்டதாதல் வேண்டும். 1787- 'நலத்திலங்குகன்னிபினிற் புகுந்திய தினத்த' என்று பிரதியில் உள்ளது.

1789. சோமசுந்தரகுருசுவாமி - சிவஞானமுனிவரின் சீடருள் ஒருவரான இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை.

1790. இப்பாட்டினும் 1795-ம் பாட்டினும் அஷ்டாவதானஞ் செய்யும் முறை விளக்கப்படுதல் காண்க. ஆனந்தநாதன் - ஆனந்தரங்கப்பிள்ளை போலும்.

1791. பார்த்திவர்கள் புகழ் நல்லூர் - பார்த்திபநல்லூர்.

1798. சரபேந்திரர் - சத்ரபதி ராஜஸ்ரீ சரபோஜிமகாராஜா (கி. பி. 1798—1832)

1799. கலிங்கத்துப்பரணி ஏடு 100-ஆண்டுகட்குமுன் அரிதிற் பெற வேண்டியிருந்தசெய்தி இதனாற் புலனாம்.



1800. ஒருகாம்புக்கு என்றது - பெண்ணாகிய தனக்கு எ-று. இருதலை - தலையுங் கீழும். பூ - மலர்; பூப்பு. ஒக்கல் - சகோரப்புள்; 'நீரிடும்பை புள்ளினு ளோங்க லறியும்' என்ப (நான்மணிக். 96).

1802. தாக்கு - எதிர்ப்பு. நோக்கு - உட்கருத்து. 1803. வழு - பாடன் முறை.

1805-7 இம் மூன்றுபாடல்களும் ஆசிடச்செய்யுட்குக் காட்டப்பட்ட பொய்கையார்வாக்காகும். 1805—ம் பாட்டுக் குறைந்தும் 1806-7—ம் பாடல்கள் மிக்கும் வந்தன. "ஆசிடச்செய்யுள் பாடுதற்குரியார், ஆக்குதற்குங் கெடுத்தற்கும் ஆற்றலுடையராகி, முக்காலப்பண்பும் உணர்ந்த இருடிகள் எனக் கொள்க" என்பர் யாப்பருங்கலவிருத்தியுடையார். 1438—ம் பாடற் குறிப்புங் காண்க.

1808. இப்பாட்டுடன் 'பாலன்றனதுருவாய்' 'எளிதி னிரண்டடியும்' என்று பொய்கையாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதிப் பாசுரங்க ளிரண்டும் (69, 51) காட்டப்பட்டு, 'அரிமலராய்ந்தகண்' என்பது பொய்கையார்வாக்கு' என்று, யாப்பருங்கலவிருத்தித்தொடராகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இத்தொடருள் 'என்பதும்' என்றேனும், 'என்பது முதலியன' என்றேனும் திருத்தங் கொள்ளத்தக்கது; என்னை? மேற்குறித்த முதற்றிருவந்தாதிப் பாசுரங்களிரண்டும் (69, 51) பொய்கையார்வாக்காகவே அவ்விருத்தியுடையார் 93—ம் சூத்திரவுரையுட் காட்டுதலான் என்க (யாப். வி. பக். 219—20).

1810. "இப் பொய்கையார்வாக்கினுள் 'ஒக்கும்' என்பதனை எல்லாவற்றொடுங்கூட்டிப் பொருளுரைத்துக்கொண்டாற்போலக் கொள்க" என்றார், காரிகையுரைகாரர் (உறுப்பியல், 7, உரை).

1811. 1438—ஆம் பாடற் குறிப்புக் காண்க.

1816. இது, கச்சிப் பல்லவவேந்தன், தன்னகரை விட்டு வெளியேறும்படி ஆழ்வார்க்கு ஆணையிட்டபோது அங்கநர்த் திருவெஃகாவிற் பள்ளிகொண்டருளிய திருமாலை நோக்கிப் பாடியதென்பதும், பெருமான் அவ்வடியார்விருப்பின்படி, தம் நாகப்பாய் சுருட்டிக்கொண்டு அவர்பின் சென்ற செய்தியும் பிரசித்தமானவை.

1818. ஆய் - ஆயனான திருமால்; தாய்போன்றவன் எனினும் பெரியபிராட்டி எனினும் ஆம். நேமி - சக்கரம், விரலணி (பிங்.).

1819. ஐம்பொருள் - அர்த்தபஞ்சகம்; 1844—ம் பாடல் காண்க. நாற்பொருள் - புருஷார்த்தங்கள். முப்பொருள் - சித் அசித் ஈசுவரன். சேய் - சடகோபர்.

1820. செய்மொழி - திருவாய்மொழி. 'செய்மொழியோ தாய்மொழியோ' என்றும் பாடம். தாய்மொழி, வாய்மொழி என்பன வேதத்தைக் குறிப்பன. (பரிபா. 2) ஆய் மொழிகள் - ஆராயத்தக்க நூல்கள். சாய்மொழி - சாயலான நூல். திருவாய்மொழியும் வேதமும் வேறன்றி ஒன்றே என்பது கருத்து.

1821. ஆழ்வார்திருநகரியில், தாம்பிரபர்ணியாற்றின் வடகரையில் வசித்து வந்த சித்தரொருவர், தம்மால் வளர்க்கப்பட்டுவந்த நாயொன்று பகற்போதில் அந்நதியைக்கடந்து அத்திருநகரித்தெருவில் உள்ள உச்சிஷ்டங்களை உண்டு மாலையில் திரும்பிவந்துகொண்டிருக்க, ஒருநாள் அங்ஙனம் அது வாராததை அறிந்த சித்தர் ஆற்றங்கரைசென்று நோக்கியபோது, வழக்கப்படி அஃது ஆற்றைக் கடந்துவருமிடையில் பெருவெள்ளம்வந்து அதனை இழுத்துச்செல்வதையும், அந்நாய் கூடியவரைமுயன்றும் செயலற்று நீரில் அமிழ்ந்தி இறக்குந்தருணத்தில் சிரக்கபாலம் வெடித்து அதன் ஆத்மா வெளிப்பட்டு விமானத்தில் ஆரோகித்துச் செல்வதையும் கண்டு பெருவியப்பும் உவப்பும் அடைந்து இப்பாடல் கூறினர் என்பது வரலாறு. இப்பெரியாரைக் கருவூர்த் தேவர் என்ற சித்தர் என்று கருவூர்ப்புராணம் கூறும். திருநெல்வேலிப் புராணத்தும் இச்சித்தர் ஆழ்வார்திருநகரி சென்றுவந்த செய்தி கூறப்பட்டுள்ளது. தாம்பிரபர்ணியின் மத்தியிற் கட்டப்பட்ட மண்டபமொன்றில் மேற்கூறியவாறு, நாயொன்று வீடுபெற்ற சரித்திரம் கற்றூணிற் பொறிக்கப்பட்டுள்ளதென்று தெரிகின்றது.

1823-4. நல்லை - உடைய நங்கையார். தேசிகன், ஞானதேசிகன் என்பன ஆழ்வார் திருநாமங்கள்.

1825. வேதவேதாந்தங்களின் முடிந்த பொருளை இவ்வரிய பாடல் விளக்குவதென்பது நல்லறிஞர்வாய்க் கேட்டறியத்தக்கது.

1827. குடப்பாம்பு - பாம்புகள் அடங்கிய குடம். கொல்லி காவலன் - கொல்லிமலைசூழ்ந்த நாட்டிற்கு, அன்றிக் கொல்லி என்ற நகர்க்குத் தலைவன் என்க. 'கொல்லிக் கண்ணன்' என்ற பழம்புலவர் ஒருவர் உளராதலின், அப்பெயர் கொண்ட நகருண்மை காண்க.

1828. மண்டங்குடி, சோணாட்டதென்பர்; பாண்டிநாட்டுத் திருவாடானைச் சேர்த்து ஒன்றுண்டு. தினைத்தல் - தொழுதல்.

1829. மூளைமதியாகிய அழகிய கொள்ளி என்க. 'மதியாங் கொள்ளி' என்பது பாடமாயின் நேராகும். மருவாளன் - மருவிய வாளினையுடையவன்.

1833. பொருநல் - தாம்பிரபருணி. 1836. ஐயன் - ஸ்ரீசடகோபர். உத்தரித்தல் - மேலே தூக்குதல்.



1841. கொண்டி - ஓர் இடைச்சி.

1842. பிரமேயசாரம் என்ற நூல் இப்பெரியார் அருளியது.

1844. இறைநிலை - பரஸ்வரூபம். உயிர்நிலை - ஸ்வஸ்வரூபம். தக்க நெறி - உபாயஸ்வரூபம். ஊழ்வினை - விரோதிஸ்வரூபம். வாழ்வு - புருஷார்த்த ஸ்வரூபம்; இவ் வர்த்தபஞ்சகங்களையும் குருகையர்கோன்வேதம் ஓதும் என்க.

1847. நம்பூர் - நம்பிள்ளையின் குடிப்பெயர்; 'நம்பூர்த் திருநீலகண்டச் சிரமவித்தனேன்' என்பது சாஸனத்தொடர் (S. I I. iv, p. 90) இவ்வூர், குண்டூர் ஜில்லா குண்டூர்த்தாலூகாவில் உள்ளது (I. M. P. Gt. 151).

1850. வெய்யோன் - அடியார்கள்விரும்பும் திருமால். காண்பார் - வீடுபெறமுயல்வார். வழி - அர்ச்சிராதிமார்க்கம்.

1853. 'மாமுடும்பை' என்று திருத்துக. 'மாம்'-ஸ்ரீகீதையில் - 'ஸர்வதர்மாந்' என்ற சரமச்லோகத்துள்ள பதம். தொட்டு - தன்னைச் சுட்டி. துயம் - த்வயம் என்ற திருமந்திரம்.

1854. தூப்பில் - கச்சிநகர்ப்பகுதி. திருவேங்கடமுடையான் - ஸ்ரீ வேங்கடநாதர் என்ற வேதாந்ததேசிகர்.

1855-6. இவை தேசிகப்பிரபந்தப்பாடல்கள். பரிமுகர் - அயக்கிரீவர். வானியாறு - பவானிநதி. பூரித்தல் - முற்றுவித்தல். அயிந்தை - திருவயிந்திரபுரம்.

1862. எட்டும் பறித்தல் - திருமந்திரோபதேசம் பெறல்.

1864. 'மடந்தைமாதர்மேல்' என்பது பாடமாயின், மடந்தைப்பருவமுடைய பெண்களிடம் என்க. அவ் உலகளந்த, அவ் ஒன்னலார் என்று பிரிக்க; உலகறிசட்டுக்கள்.

1868. நகரம் - திருவரங்கம். திருமலையாழ்வார் - மணவாளமாமுனிகள் அனுஷ்டானுதிகளும் காலக்ஷேபமும் நடத்திய போந்த ஸ்தானம்; (யதீந்திர. பிரபாவம். பக். 94, 98).

1871. இப்பெரியார், மாறனலங்கார ஆசிரியரின் குருவான முனிவர்.

1877. தெய்வீகம் - வீடுபேறு.

1883. திருபுவனசக்கரவர்த்தி ராஜாதிராஜதேவசோழன் II (கி. பி. 1172—86) திருவொற்றியூர்த்திருவிழாவுக்கு வந்திருந்தகாலத்தில் அவ்வூர் மடாதிபதியான சதுரானனபண்டிதரும் சோமசித்தாந்தப் பிரவர்த்தகரான வாகீசபண்டிதரும் அரசனுடனிருந்து ஆளுடையநம்பிபுராணம் கேட்டனர்

என்று அந்தலத்துச் சாஸனமொன்று கூறுகின்றது (Ep. Rep. No. 371 of 1911). இவ்வாசிசர் ஞானமிர்த ஆசிரியராயின், அவர் இற்றைக்கு 750—வருஷங்கட்கு முற்பட்டவராவர்.

1892. சேடன் - ஆதிசேஷனையொத்தவன்.

1893. உழும் அலம் - உழும் கலப்பை.

1897. பெருமானார் சொற்ற மொழியாகிய பாலை எனவும், மொழிப் பாலைக் கேளாமுன் கழிப்பாலை மான் காணீர் எனவும் இயையும். கழியினும் பாலையினும் உழன்றுதிரியும் மான் என்க. அளவையீடு - பிரமாணங்களுடன் கூடிய உரை.

1899. சாதகர் - சரியை கிரியை வழிநிற்போர்; 'சாதகர் பாசக்கழுவி' என்பர் (திருவிளை. நகரப். 90).

1901. படம்பக்கநாயன் - திருவொற்றியூர்ச் சிவபிரான் (பெரியபு. கலிய. 14).

1907—8. குருநமச்சிவாயர்சிஷ்யர் ஆனந்த நமச்சிவாய பண்டாரம் விஜயநகரவேந்தரான வேங்கடபதிராயர் காலத்தவர்—அஃதாவது கி. பி 1592ல் வாழ்ந்தவர்—என்பது, விரிஞ்சிபுரம் சாஸனமொன்றால் தெரியவருகின்றது. (Ep Rep. No. 61 of 1887).

1910—12. இவை பண்டாரக்கவித்துறை என்ற நூலின் பாடல்கள்.

1913. இச் சம்பந்ததேசிகரைத் தொண்டைமண்டலத்தவர் என்று அம் மண்டலசதகம் கூறும் (20). 1914. உண்மை விளக்கம் - சைவசித்தாந்த சாத்திரம் 14-ல் ஒன்று.

1915—17. இப்பாடல்கள், கி. பி. 1598, 1608-ல் இராமேச்சரக் கோயிற்றிருப்பணி முற்றுப்பெற்றசெய்தி குறிப்பன. தளவாய் சேதுபதி காத்தத்தேவர் அவர் குமாரர் கூத்தன்சேதுபதி காலங்களில், இவ்விராமநாத பண்டாரம் திருப்பணிநடத்தியவர் (Tamils and Sanscrit Inscriptions pp. 58-9). வீரபூபதி-வீரப்பநாயகர். (1916) 'புனற்கு மகாலயத்தை' (1917) 'குற்றங்கடிந்த வராமநாயகர்' என்று அச்சாஸனங்களிலுள்ளன.

1919. விரிசிலை - ஒருநதி. பொற்கோட்டை - ஊர். இவை சேதநாட்டன. சேதுபதிகள் உதவிய நன்றிபாராட்டியே 'சேதுபதியன்னமும் காவிரிநீரும் ஆவுடையப்பர் நீழலும்' என்று அவ்வாதீனத்தார் கொண்டாடுவர் என்பர்.



1920. வலங்கை மீகாமன் - வலங்கைமான் என்ற சோணாட்டூர். 'வலங்கை மீகாமனில் வாழ்ந்திருந்தே யறிவாளர்தன் உரையாமறிவாளர்தச் செந்தி' என வருவதும் காண்க. (A Descriptive Catalogue of The Tamil Manuscripts, Vol 3, p. 1251-2

1921. ஊர் (இல்லை), உடை (தோல்), மேற்கொள்ளல் (ஆன்) என்க.

1928. இங்கு இரு, உப்பு அள்ளிக் காட்டு என்க.

1931. பிரபுலிங்கலீலை இயற்றப்பட்டகாலம் சக. 1574 (கி. பி. 1652) ஆகும். சிவப்பிரகாசமுனிவரால் புகழப்பட்டவரும் அவரை ஆதரித்தவருமான பண்டாரம் இலிங்கசெட்டி என்பார், திருச்சிராப்பள்ளி ஜில்லா பெரும்புலியூர் (Perambalur) தாலுகாவைச் சார்ந்த வெங்கனூரில் (வெங்கையில்) சிவாலயத் திருப்பணி நடத்தியது சக. 1545 (கி. பி. 1623) ஆகும் (Ep Rep. No. 1 of 1913). இதனால் இத்திருப்பணி நடந்தேறிய 24 வருஷங்கட்குப்பின் இந் நூல் செய்யப் பட்டதென்பது தெரியலாம்.

1933 காரி - வின்னன்; பெண். வேறு விலைந்து வில்லாளது காரி என்று பெயர்கொண்டதை விரும்பியே எ-று.

1939. தமிழ்ப்புலவன் - சம்பந்தமூர்த்திகள்.

1943. பொறுக்கடிதல் - தானே உரிமையுடையனாதல்; சங்கநூல்களை இவர்போற் கற்றவல்லவர் பிறரில்லை எ-று.

1947. மழக்குணம் - குழவித்தன்மை, வெள்ளைக்கிழத்திமாலை - சகலகலாவல்லி மாலை. தருமை - தருமபுரம்.

1951. சரபோஜிசெய்தியை 1798—ம் பாடற்குறிப்பினும் காண்க. பாகைப்புன்னைவனநாதன் என்பார் இராமபாரதியால் ஆத்திருடிவெண்பாவிற் புகழப்பெற்றவர்; 1755—ம் பாடற் குறிப்புக் காண்க.

1952. சகஜிமகாராஜர், 1686-1710-வரை தஞ்சையிலிருந்து சோணாடாண்ட மகாராஷ்டிரவேந்தராவர்.

1956. கோவிந்ததீக்ஷிதர், தஞ்சையாண்ட அச்சுதநாயக்கரின் (1572—1614) தலைமையமைச்சராக விளங்கியவர்.

1960. உருளும் கறங்கும் (காற்றாடியும்). நேத்திரக்கு (—கண்ணுக்கு) தீபத்தை அருளினன் என்க.

1961. பொன்மாறை வினைதீர்த்தான், சிவரகசியநூலையும் பாடச்செய்து அரங்கேற்றுவித்தவர் என்பது 1951—ம் பாடலுட் காண்க. பொன்மாறை - தொண்டைநாட்டுப் புலியூர்க்கோட்டத்தைச் சார்ந்ததும் பொன்மாறு என்று வழங்குவதுமான ஊர் (I M. P. Cg. 994).

1964—5. தாயுமானவர் சமாதி இராமநாதபுரத்துக்கு மேற்பால் லக்ஷ்மீபுரம் ஊருணிப்பக்கத்துள்ளது. சகஆ 1581 (=கி. பி. 1659)ல் இப்பெரியார் முத்தி யடைந்தனர்.

1968. இப்பிள்ளைத்தமிழ் அரங்கேறிய காலம் சக. 1647(-கி. பி. 1725) ஆகும்.

1969. சயவீரன் - வீரபத்திரக்கடவுள். அன்று - தக்கயாகத்தன்று.

1971. கி. பி. 1725—ல் சிவபதமடைந்தனர் என்க.

1973. 'கைடாற் றடவுறிற்' என்று திருத்துக.

1977. சிவஞான முனிவர் சிவபதமடைந்தபின் 28-ஆண்டுகள் கழிந்து கி. பி. 1790—ல் இம்முனிவர் சிவகதியடைந்தனர் என்பது இப்பாட்டால் தெரியலாம்.

1979. இப்பாட்டு, வட ஆர்க்காடு ஜில்லா போளூர்த்தாலூகாவைச் சார்ந்ததும் ஜைனக்கிராமமுமான வைகாவூர்த்திருமலையிற் பொறிக்கப்பட்டதாகும். சோழன் அருமொழி - முதலாம் இராசராசசோழன். 'கனிச் செகாரமருபொற் சூரியன்' என்று எழுதப்பட்டுளது.

1980. திருநயனாதியர் - போலித்தருக்கம் புரியும் சமயத்தர். பாறுதல் - சிதறியோடுதல்.

1981. கொங்குவேண்மாக்கதை - பெருங்கதை. 'எங்கெழிலென் ஞாயி றெளியோமல்லேம்' (தேவா. 1229,2.) 'எங்கெழிலென் ஞாயி றெமக்கு' (திருவாச. திருவெம்பாவை, 19). எனவருவனகாண்க.

1998. குறுமுனிவனுல் அமைக்கப்பட்ட கொற்சேரி என்றது தமிழ்ச் சங்கத்தை. 'தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன் றமிழ்ச்சங்கம்' என்றார் கம்பநாடரும். (கம்பரா. நாடவிட். 31).

1999. வள்ளுவர்வைப்பு - திருக்குறள்.

2000. ஓரடிமுக்கால் உரைத்த...ஈரடி-ஒன்றே முக்காலடியில் அமைந்த குறள். 'ஈரடியக்கரம்பாவனையின்' என்றார் பிறரும் (2003). முக்காலும் ஒத்தவாம் என்க.

2003. "மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால், ஞால முழுது நயந்தளந்தான், வாலறிவின், வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார், உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து" என்ற பாணர்வாக்கு இதனுடன் ஒப்பிடற்பாலது (வள். மாலை, 6).



43

### வேறு.

1207 தனைக ளாபவல் வினைப்படுத் துயிர்கடாந் துமொறி
வளைய வேவா வவற்றளாய் வினையவே வருதி
வினைவ துற்றிடா தறமலா தனசெய விலகும்
கனைக ளுவில கனைகளு மவரெவர் கண்ணு. (௨௨)

1208 நீயு மாவியு மாயையு மெனநிகழ் திறத்தோ
டேயு நீர்மையி னேனைய வவற்றினு ளீடாய்த்
தோயு நின்றொழி லவற்றுற தொழில்களீ திவையென்
றுய்வ தொன்றமுன் றென்பது முணர்வரி தமலா. (௨௩)

1209 தாயுந் தந்தையு மாகுநின் றிருவுருத் தனையே
தேயு முள்ளத்தின் முத்தாரம் படிதுதிப் பவரை
நீயு நின்றுபோற் றுதிமனக் கொடுநினைஇ நிகரீ
ராயு நூல்பல வறிந்தும்பார் மயர்வற வறிவார். (௨௪)

1210 சுதச்சொ ரூபஞா னுதிகச் சொரூபதோன் மறைநா
லகச்சொ ரூபகற் றவர்க்குமே லையர்க்குமா ராய்வு
தகச்சொ ரூபமோ டரூபமாஞ் சகளநிட் களநீள்
செகச்சொ ரூபநின் னிலைமையா ரளவிடுந் திறத்தார். (௨௫)

### வேறு.

1211 முதனுளிற் பிறந்திறந்த பிரம ராகு
முதல்வரெனும் பிரமருக்குத் தொகையு மண்டஞ்
சுதமாகி முறைமுறையே தோன்று நின்ற
தொகையினையும் பெருதகத் துணித லாற்றுப்
பதமாற வருதொகையு மதன்மே லாலம்
பாசடைக்கண் படைத்தொகையும் பானே வேதந்
திதமாக வுணர்ந்தவுணர்ந் திலனுல் யாரே
திரட்டியயர் வறவுணர்ந்துந் தெளிகி ன்றோரே. (௨௬)

1212 *படைக்கின்ற [1]தொழிலாதிப் பிரமர் வாழ்நாள்
பற்றுவிடப் பகிரண்ட [2]பதவி யாவு
முடைக்கின்ற பெரும்புனலி னகத்தா யாக்கை
யொருங்கிழந்தே யலகிறந்த வுயிர்கள் யாவும்
புடைக்கின்ற பொழுதினகப் பரித்தி காவிப்
[3]புடைக்கனன்மாக் தாதருந்திப் புறத்தே மீட்டு
மடைக்கின்ற நினதுபெருங் கருணைக் கெந்தா
யவைபளித்த கைம்மாறொன் றறிகி லேனே. (௨௭)

1213 வாங்குபெரும் புனன்மறித்தும் வாரா திட்ட
வரம்பெனலா மண்டபித்தி யகத்த வாகி
போங்குலக மொன்றினுக்கோன் றடக்கி லாமை
யும்பர்நிலை பெற்றமையு மும்பர்க் கும்ப
ராங்கமையோர் பதின்மடங்கோன் றினுக்கோன் றென்று
மவற்றினையும் விரைசையையு மன்ப ரென்பார்
பாங்குடனே கடக்கவழி கிடக்கு மாறும்
பரந்தாமத் தாய்சிறிதுந் தெளிகி லேனே. (௨௮)

வேறு.

1214 வினையா தரித்தொலிக்கும் வெண்சங் குடனே
புனையாழி யங்கைப் புனிதாபொற் கஞ்ச
மனையாண் மணவாளா வாழியென வேத்தி
நினையாதார் நெஞ்சினையார் நெஞ்சென் பவரே. (௨௯)

1215 நாட்படுமக் கண்படைத்த நாராய ணாநமவென்
றூட்படுதன் மேற்கொண் டபிராமா நின்னிரண்டு
தாட்படுமம் வேண்டாத் தலையன்றே சாந்தமைத்த
கோட்படுத வில்லைக் குறிசேர் பொறித்தலையே. (௩0)

[பி-ம்.] [1] செழுங்கமலத் தயன்றன் வாழ்நாள்; [2] பதவி மாக்தி; [3] புடைக் கனறற் றுவகையிற். மா,



1216 தோளா மணியுட் சுடர்போன் றுயிர்தொறும்
வேளாண்மை கூர்ந்திறைகொள் வித்தகா நின்னடியார்க்
காளாகி நின்புகழே யாராய்ந் தடிக்கடியுங்
கேளாதா ரன்றே பிறுசெவியுங் கெட்டாரே. (௩௧)

1217 வானத் தவர்கரிய மாணிக்க மொன்றிதெனுங்
கானக் குழலிசைத்த கண்ணாநின் மேனியினை
ஞானக்கண் ணோர்துணையாய் நாடோறுங் காணாதா
ரூனக்கண் ணன்றே குருடென் றுழல்வதுவே. (௩௨)

1218 வாமனா கேசவா மாதவா தண்டுளபத்
தாமநா ராயணா சக்கரா செங்கமலப்
பூமனா வென்றுரையாப் பூசியனை பல்லான்மற்
றாமனா ரென்றே யுரைப்பா ருரைப்போரே. (௩௩)

1219 பூப்படைத்த வுந்திப் புனிதாநின் பொன்னடிக்கீழ்க்
காப்படைத்த தண்டுளபங் கைபுனைந்து வாய்க்கொள்வார்
பாப்படைத்து நின்சொற் பாவுமியற் பாவலர்போ
ஞாப்படைத்தா ரெய்து நலனெய்தப் பெற்றாரே. (௩௪)

1220 நாவார வேபுகழ்ந்து நாராய ணாநமவென்
றோவா வுரையினொடுங் கண்ணீ ருகளைப்பக்
காவார் மலர்பறித்துக் கண்ணாநின் காற்கமலத்
தூவாதார் கை[1]யினையுங் கையென்று சொல்வாரே. (௩௫)

1221 போரார் தடஞ்சிலைபொன் பொற்கதை வாளிரண
வீரா கரவாழி வெண்சங் கிவைசூழக்
கூராழி யுட்டுயின்ற கோவேநின் கோயில்வலம்
வாரா தவர்கால் மரப்பாவை பின்காலே. (௩௬)

வேறு.

1222 சபலினை யளியினை கனியினை கடலினை
நயனனி தழைகனி னளினமை யனையிறை
யியலிசை நடனிய [2]வினைநினை தினைகனை
நியதிநி னிலையிழி [3]தினைகனி னினைகில. (௩௭)

இது, கொம்பும் காலும் ஒற்றும் இன்றிவந்த நிரோட்டியம்.

[பி-ம்.] [1] புனையும். சா. [2] வினைநினை, சா. [3] தினைகனி.

**வேறு.**

1223 முருகு [1]முழுது மொருகு பதும
மருவு பதுமை மரும முழுகு
முருவி னொருமை யுருவ மிருமை
பெருமை பெறும னுபவ பெரும. (௧௮)

இது, ஒற்றும் காலும் இன்றிவந்த ஒட்டியம்.

1224 *அரவ மகாசல சயன படவரவ
கரச ரணநயன வதன கமலதர
[2]வரத சரதகச ரதத சரதமக
பரம பரமமல வனக [3]பரமமல. (௧௯)

இது, அகரக் குற்றுயிர்மடக்கு.

**வேறு.**

1225 *ஆயா பாலா காரா பாரா ராலாலா
மாயா மாயா மாமா தாகா [4]வாளுடா
காயா காயா [5]வாளா நாகா காகாகா
[6]தாயா நாதா தாளா லாளா டாளாளா. (௨0)

இது, ஆகாரநெட்டுயிர்மடக்கு.

**வேறு.**

1226 கூப்பிட் டிடைகோதை தூசகற்றிக் கோற்றொடிக்கைக்
கூப்பிட் டிடைக்குடத்தி கொட்டிக் குறுகுறகக்
காப்பிட்ட சோதி படைத்தசெகத் தைக்கடைக்கட்
காப்பிட் டதிற்சுகிக்கக் கற்பதே கற்பதே. (௨௧)

இது, வல்லினப் பாட்டு.

[பி-ம்.] [1] முழுதமொழுகு. சா. 'முழுத மொருகு', 'முழுதமொழுகு' என்ற இரண்டும் '...காலும்இன்றிவந்தஒட்டியம்' என்ற இப்பாட்டின் கீழ்க்குறிப் பொடு மாறுபடும்; ஆயினும் பிரதிகளிலுள்ளபடி பதிக்கலாயிற்று. [2]வரதசரத மகவரதசரதமக. [3]பரமபத; [4]வாளுளா; [5]வாளா வாளாகாகாளா; [6]தாயா காதா காதா காகா தாளாளா. மா.



1227 மன்னு மனமேமி மான்மீ னன்ஞான மான்
மன்னு மனமேமி மானீந மன்மனீ
முன்னேன மாமா னினிமுன்ன மன்னைமுன்
மூன்னோந மோநமந மோநமந மோநம. (௨௨)

இது, மெல்லினப் பாட்டு.

1228 வளையாழி யுள்வாள் வரிவில் லயல்வாழ்
வளையாழி யுள்வா ளராவாய் வளர்வா
யளவா யளியா யயிலா விரலா
லளவா யளியா யலரா ளருளாய். (௨௩)

இது, இடையினப்பாட்டு. முன்னர் 'நமோநம' வென்பதனை யிந் னிறுதியினுங் கூட்டுக.

இவை மூன்றும் முதலடியும் இரண்டாமடியும் அடிமுதன்மடக் காகியும், மூன்றாமடியும் நான்காமடியும் தம்மின் வேறோடிமடக் காகியும் வந்தன.

1229 நாமாதி யென்ன நவின்றுயு வொல்லையினுட்
போமாற தாய்வான விற்போலும் புன்னிலைத்தா
யேமாறு தேவரையு நின்றோ டிருநிலத்தோர்
தாமா தவநால்வ ரென்பதுவுந் தக்கதே. (௨௪)

1230 நந்தா வளம்பெருகு நாரா யணவெமது
தந்தா யகிலமெலாந் தந்தாய் சகலமுமாய்
வந்தா யழியா மதிநான் மறைமுடிவி
லெந்தாய் திருவிளையாட் டேதென் றறிவேனே. (௨௫)

1231 வேதா வியந்தின் னணைந்து திப்ப மேதக்க
மூதா ரருட்சொருப மூவா முதலாய
தாதார் பசுந்துளபத் தாரா னினதுளத்திங்
கேதாசை யுற்றனைகூ றென்றே வினவினனே. (௨௬)

வேறு.

1232 இறந்துபிறந் துழல்வதுவே திடனுரு
மன்னுயிர்கட் கெல்லா நின்னிற்
பிறந்தபெருங் கருணையதே கனகனெனு
மூபநிடதம் பெம்மா னேநீ
யறந்தழைபு மந்தாம மெனக்களிப்ப
தெக்கால மவனி மீதே
சிறந்தவர்கட் புலங்கொளக்காத் தருள்வதுமெக்
காலமெனச் செப்பி னானே. (௪௭)

1233 கண்ணகன்ஞா லம்புரக்குங் கதிராழி
வலத்தமைத்த கடவு ளாகும்
விண்ணவர்தம் பெருமானும் விரிஞ்சன்விருப்
புறவுரைத்த விதியுட் கொண்டே
யுண்ணயந்த பெருங்கருணைக் கடலுகளித்
தெழப்புளகித் தவட்டா மென்மைத்
தண்ணயிர்தஞ் செவிக்களிப்ப தெனக்கனிவா
யினைத்திறந்து சாற்று மன்றே. (௪௮)

பத்தாவது:
பிரமன் [1]தோத்திரச்சருக்கம் முற்றும்.

---

௧௧. தானங்காட்டு சருக்கம்.

1234 மண்டு வான்புன லழித்தபின் மறித்துமுற் பவித்த
வண்ட கோடிக ளவற்றினுக் காதியேன் பதுவாய்ப்
புண்ட ரீகையும் யாமும்வாழ் வுறுந்திரைப் புவிமே
லுண்டோர் தொன்மை யதன்சிறப் புணர்த்துகே ளுணர்நீ. (௧)

1235 ஆதிக் கேத்திரங் கமலையும் யாமுமன் புடன்வைகுஞ்
சோதிக் கேத்திர மமரரு முனிவருந் துதிசெய்யுஞ்
சாதிக் கேத்திரஞ் சுருதியும் வேள்வியுந் தழைத்தோங்கு
நீதிக் கேத்திர மதற்கிணை யஃதலா னிகரின்றே. (௨)

1236 அன்ப ரானித்த ருக்கமிர் தம்பர்வாய்த் தவைபோது
மன்ப தைக்குவாய்த் துளவமிர் தேபெண மதிதோய்பே
ரின்ப மென்பதோன் றணிக ராயதென் றிறைப்போதுந்
துன்ப மென்பதோன் றுறுதகன் புலமையர் துதிப்பாரே. (௩)

1237 வாயு வேயுண வாமெனக் குகையுளாய் மாயாதே
தேயு வானத னள்ளிடை வெம்மையாற் றீயாதே
வீயு நாளெழு மாழ்புனன் மூழ்கியும் வீயாதே
பேயு மெய்வா மொல்லையாண் டுறைவதோ டேயாதே. (௪)

வேறு.

1238 சித்தப் பிரமம் புறப்போகத் திடமே பயிற்று முபநிடதச்
சத்தப் பிரமந் தெளிந்தெனவே தனிநன் பிரம மெனத்தெளியுஞ்
சுத்தப் பாம வுணர்வுடையோர் தொலையாச் சுகஞ்சென் றனுபவிக்கு
முத்தி யிருந்தின் கனுபவிக்க மூன்வந் துறைவ தெனலாமே. ()

1239 வதைக் கலங்கா தழற்பிழம்பா லுட்கா மட்கா தூழிதிரி
போதைப் புனலின் பெருக்கினுக்கும்புதைவுற் றிளகா வச்சிரத்தி
னாதிப் பிரமன் பயிரண்ட மமைக்கு மதற்கு முன்னுகிச்
சோதித்திருமந்திரத்திருமண்டோற்றமுளதென்றன் றுளதாம். ()

1240 பிரமான் டமெனப் படைத்ததனுட் பிடார் விபுதர் முதலாய
வரமாண்பமைமன் னுயிர்க்கிடமாய்வயவாளரின்முடிபொறுத்த
வுரமாண் பமைபே ருலகனைத்து மொருங்கு பொறையுந் திடனுமிரத்
தரமாண் பமையுங் ககரினுக்குச் சமமாக் தொலையுக் கறியாவே. ()

---

[1] [பி-ம்.] சோத்திரச். க.

வேறு.

1241 மானிடராய்த் தாபரமா யூர்வைகளாய்ப்
பறவைகளாய் மாவாய் வானத்
தானவராய் மீன்கணத்தோ டெழுவகையுஞ்
சனித்தறமொன் றறியா வஞ்சத்
தீனர்களாய்ப் பிறந்திறப்பா ரக்கர்க்கோ
ரோசனைசென் றிறந்தா ரேனும்
ஞானதராய் நமதுபழம் பதித்தமரா
யவர்தமராய் நயப்பார் மன்னோ. (அ)

வேறு.

1242 ஆலமுந் தழலு மளவளா யுயிர்க்கு
மடுகொலை பயின்றவோக் கினராய்ச்
சூலமுங் கொடிய பாசமுங் கொடுதன்
றூதுவர் கொலைக்கெழும் போழ்தின்
ஞாலமீ தினிலந் நகர்க்கொரோ சனைநீர்
நண்ணன்மின் னண்ணன்மின் னெனவே
காலனு மவர்பின் றொடர்ந்தவன் செவியுட்
கட்டுரை பயிற்றுமான் புடைத்தே. (கூ)

1243 கோட்டுமிவ் வண்டத் தலகின்மன் னுயிர்க்குக்
குறிக்கொள விழைத்தலும் வினைநின்
றாட்டுமொண் டுறக்க நாகமென் றிவற்று
ளொன்றினுக் கொன்றதா கப்பேர்
நாட்டுமப் பொழுதந் நகர்கணக் கரும்பன்
னகரொடிந் நகரையுந் திட்டிக்
காட்டிமாட் டெறிதற் கஞ்சமாங் கதிர்ப்பல்
கணமும்விட் டினையுறுங் கதிய. (க0)

1244 வைந்நுதி வயிரப் படைக்கணிச் சியொடு
மற்றுள பணிக்கடல் வளாகத்
தெந்நகரையுங்கண் டேனைய வுயிர்கட்
கிடுக்கணே பிழைத்திடு நமனும்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (5) **Miscellaneous** வரவு ... | ... | 6 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 713 | 12 | ... | 1012 | 13 | ... |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வகையில் வரவு ... | 6 | 5 | ... | | | |
| (2) செந்தமிழ்ப் பத்திரிகைக்குச் சந்தா வகையில் வரவு ... | 4 | 3 | ... | | | |
| (3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 5 | 15 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 16 | 7 | ... | 64 | 10 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (5) சங்கக்கட்டிடவேலை கண்டிராக்டருக்கு அட்வான்சு, கண்டிராக்டில் சேராத வேலைகளுக்கு சாமான்கள்க்கூலி வகையரு சூப்பர்வைஸர் சம்பளம் கொடுத்த வகையிற் செலவு ... | 526 | 6 | ... | | | |
| (6) தபால், தந்தி வகையிற்செலவு | 6 | 12 | ... | | | |
| (7) சங்கமாசிக சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு... | 30 | ... | ... | | | |
| (8) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச்செலவு ... | 99 | 1 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 963 | 8 | 10 | 519 | 11 | [illegible] |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 35 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு | 48 | ... | ... | | | |
| (3) தபால், தந்திவகையிற் செலவு. ... | 6 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 89 | ... | ... | 37 | ... | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **III Press Section:** | | | | | | |
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு. | 77 | ... | ... | | | |
| (2) பைண்டிங் கூலிவகையில் வரவு ... | 3 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 80 | ... | ... | 7 | ... | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **III Press Section:** | | | | | | |
| (1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 27 | ... | ... | | | |
| (2) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு. | 16 | 9 | 4 | | | |
| மொத்தம் ரூ. ... | 43 | 9 | 4 | 290 | 14 | 6 |

| விவரம் | 1933 ரூ. | அ. | பை. | 1932 ரூ. | அ. | பை. | விவரம் | 1933 ரூ. | அ. | பை. | 1932 ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஆக மொத்தம் செலவு ரூ ... | 1096 | 2 | 2 | 847 | 9 | 8 |
| | | | | | | | மாத முடிவில் மீதி இருப்பு ரூ ... | *12801 | 14 | 9 | 15032 | 12 | 10 |
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 810 | 3 | 0 | 1084 | 7 | 0 | ஆகமொத்தம் ரூ ... | 13898 | ... | 11 | 15880 | 6 | 6 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ... | 13087 | 13 | 11 | 14795 | 15 | 6 | *By M. U. C. B. Pass Book Rs. 2982- 6- 4 | | | | | | |
| | | | | | | | M. R. C. C. Bank Pass Book Rs. 9510-10- 2 | | | | | | |
| ஆகமொத்தம் ரூ ... | 13898 | ... | 11 | 15880 | 6 | 6 | Cash on hand Rs. 308-14- 3 | | | | | | |
| | | | | | | | 12801-14- 9 | | | | | | |

குறிப்பு:-மேலேகண்ட விபரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 12801-14-9 தவிர, மதுரை M. R. C. C. Bankல் கட்டியிருக்கிற Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; [illegible] Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் கட்டியிருக்கிற Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகை ரூ. 5000; [illegible] வைக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1200. [illegible] ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 1—3—'34.

LAKSHMINARAYANAN,
MANAGER. 1—3—'34.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1934-ம் வரு மார்ச்சுமாத வரவு செலவு கணக்கு.

| | வரவு | | | | | | | செலவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விவரம் | 1933 மார்ச்சு ரூ. | அ. | பை. | 1932 மார்ச்சு ரூ. | அ. | பை. | விவரம் | 1933 மார்ச்சு ரூ. | அ. | பை. | 1932 மார்ச்சு ரூ. | அ. | பை. |
| I GENERAL SECTION : | | | | | | | I GENERAL SECTION : | | | | | | |
| (1) மாதச்சந்தாவகையில் வரவு... | 50 | ... | ... | | | | (1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செலவாக்கியது ... | 120 | ... | ... | | | |
| (2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ... | 28 | 11 | 7 | | | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செலவாக்கியது ... | 127 | ... | ... | | | |
| (3) மதுரை M. R. C. C. பாங்கில் வட்டிக்குக் கொடுக்கப்பட்டு வாயிதா முடிவான Fixed Deposit தொகை திரும்ப வாங்கியது. ... | 25011 | 5 | ... | | | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செலவாக்கியது. ... | 123 | 5 | 11 | | | |
| | | | | | | | (4) Stationery, contingencies வகையிற் செலவு ... | 2 | 13 | 9 | | | |
| | | | | | | | (5) ஆபீஸ் Furniture ரிப்பேர் செய்த வகையிற் செலவு ... | 3 | 9 | ... | | | |
| (4) சங்கக்காலியிடத்திற்கு மாத வாடகை வரவு ... | 30 | ... | ... | | | | (6) சங்கக்கட்டிட வேலை சம்பந்தமாக வாங்கிய சாமான்களின் கிரயம், கூலி வகையராவுக்காகச் செலவாக்கியது. ... | 780 | 5 | 3 | | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 25300 | 9 | 7 | 146 | 2 | 9 | ஆக மொத்தம் செலவு ரூ. | 26392 | 13 | 8 | 595 | | |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ... | 12801 | 14 | 9 | 15032 | 12 | 10 | மாதமுடிவில் *மீதியிருப்பு ரூ. ... | *11709 | 10 | 8 | 14583 | 11 | 7 |
| ஆகமொத்தம் ரூ. ... | 38102 | 8 | 4 | 15178 | 15 | 7 | ஆக மொத்தம் ரூ. ... | 38102 | 8 | 4 | 15178 | 15 | 7 |
| | | | | | | | *By M. U. C. B. Pass Bk. Rs. 1961- 1-11<br>M.R.C.C. Bank Pass Bk. Rs. 9560-10- 2<br>Cash on hand Rs. 187-14- 7<br>11709-10- 8 | | | | | | |

குறிப்பு:—மேலேகாட்டிய கணக்கு இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 11709—10—8 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 25011—5—0, (2) ரூ. 1050—0—0; [illegible] Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 10000, (2) ரூ. 10000. மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகை ரூ. 5000. [illegible] ரூ. 1200. [illegible] ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, Auditor. 20—4—'34

LAKSHMINARAYANAN,
Manager.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... ... | 1 | 0 | 0 |
| | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13.* | கல்லைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

## செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| *1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | சுறுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | சேதிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14 | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சகசந்தானதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 32. | மகிஷாபஞ்சகம் ... ... ... | [illegible] | [illegible] | [illegible] |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 6 | [illegible] |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | [illegible] |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது .. ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமேசதீர்த்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழையவுரையும் (2-வது 100 செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... .. ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | யாப்பருவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 30 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

T. R. P. P. MADURA-24 லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்